வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 17.12.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 12 | பக்கங்கள் : 16

# இராஜாங்க திணைக்கள அதிகாரிகளை எந்த எம்.பி. கோரினாலும் சந்திக்கலாம்

## மனோ கணேசனிடம் கூறினார் அமெரிக்க பதில் தூதுவர்

கொழும்பு, டிசெம்பர் 17

மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரினாலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் அவர்களைச் சந்திப்பதற்கு தயாராகவே உள்ளனர். அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதற்கு தயாராகவே உள்ளோம் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான குழுவிடம் தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்க பதில் தூதுவர் மார்ட்டின் கெல்லி.

15





## தொற்றால் 21 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 17

கோவிட்-19 தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 21 உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன என்று சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

30 - 59 வயது பிரிவில் 2 ஆண்களும், 5 பெண்களுமாக 7 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 10 ஆண்களும், 4 பெண்களுமாக 21 பேர் உயிரிழந்தனர்.

இதனால், தொற்று காரணமாக நாட்டில் பதிவான மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 698 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழில் மலேரியா நோயாளி!



யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்துக்கு பின்னர் மலேரியா நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சேர்க்கப்பட்ட மல்லாகத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் ஒருவருக்கே மலேரியா தொற்று ஏற்பட்

15

## காணாமல் ஆக்கப்பட்டோர் வழக்கு: அடுத்த வருடத்திலேயேதான் தீர்ப்பு

### வவுனியா நீதிமன்று அறிவிப்பு

வவுனியா, டிசெ. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட இறுதிக்கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுமீதான தீர்ப்பு,

15

## ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒரு சிறுவர் துஷ்பிரயோகம்!

கொழும்பு, டிசெ. 17

நாட்டில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றன என்று ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாட்டில் நாளாந்தம் 32 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி

15

## மன்னாரில் சீனத் தூதுவர்!

மன்னார், டிசெ. 17

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷன் ஹொங் நேற்று வியாழக்கிழமை மாலை மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20

15

## கிளிநொச்சியில் 3 சிறுமிகள் உட்பட வடக்கில் 9 தொற்றாளர் அடையாளம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

கிளிநொச்சியில் 14 வயது மாணவியர் மூவர் உட்பட வடக்கில் 9 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடம்,

15

## மேலும் மூவருக்கு ஒமைக்ரோன்

கொழும்பு, டிசெ. 17

நாட்டில் நேற்று அடையாளம் காணப்பட்ட 3 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

15

## வடக்கில் சீனா செய்யும் அபிவிருத்தி திட்டங்களால் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பது பொய்!

### தாங்கள் அயலவர்கள் என்கிறார் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 17

"இந்தியாவும் சீனாவும் ஒரே எல்லையில் இருக்கும் நாடுகள். இந்தியாவிலும் சீன நிறுவனங்கள் பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்றன. இப்படி இருக்க வடக்கில் சீனா மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று எழும் கருத்துக்களில் அர்த்தமில்லை. அவை போலியான கருத்துக்கள்."

-இவ்வாறு நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து டான் குழுமத்தினருடனான பிரத்தியேக சந்திப்பில் தெரிவித்தார்

15








உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# சபரிமலை செல்லும் யாத்திரிகர்களுக்கு மலேரியா தொற்றாதிருக்க நடவடிக்கை!

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 17

**சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ளுமாறு வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத் தொற்று பரவவில்லை. எனினும், கடந்த ஆண்டுகளில் இந்தியா போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் மலேரியாத் தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப் பெரிய சவாலாகும்.

மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம். எனவே, சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ (தொ.பே.இல 021-222 7924) தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்.

யாத்திரை நிறைவுற்றதில் இருந்து ஒரு வருடத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று தங்கள் யாத்திரை தொடர்பான விபரங்களை மருத்துவருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்காக குருதியினை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இலங்கையை மலேரியா அற்ற நாடாக தொடர்ந்தும் பேணுவதற்கு அனைவரும் ஒத்துழைப்போம் - என்றுள்ளது. (ஐ-3)

# வெளிநாடு சென்று திரும்புவோரால் மலேரியா தொற்று பரவும் அபாயம்!

## மருத்துவர் ஜெயக்குமாரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 17

வெளிநாடு சென்று வருபவர்களால் மலேரியா தொற்று அபாயம் யாழ்ப்பாண குடாநாட்டில் காணப்படுவதாக யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியா தடுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் அ. ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்

தென்னாபிரிக்கா நாட்டில் இருந்து வருகைதந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மலேரியா தொற்று உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர் வெளிநாட்டில் இருந்து வந்ததன் காரணமாகவே அவருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளது. இலங்கையில் நீண்டகாலமாக மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனினும், வெளிநாடுகளுக்கு சென்று வருவோரால் மீண்டும் மலேரியா தொற்று ஏற்படும் அபாயம் காணப்படுகிறது

எனவே, யாழ். மாவட்டத்தில் வெளி நாடுகளுக்கு செல்வோர் தமது பகுதியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடன் தொடர்பு கொண்டு தமக்குரிய மலேரியா தடுப்பு மருந்துகளைப் பெற்று சென்றுவருவது மிகவும் உகந்தது.

இதேபோல் இந்த இறுதி வருட இறுதியில் ஐயப்ப பக்தர்கள் இந்தியாவுக்குச் செல்லவுள்ள நிலையில் அவர்கள் அனைவரும் தவறாது தமது பிரிவில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருடன் தொடர்புகொண்டு மலேரியா தடுப்பு மருந்தைப் பெற்று தமது பயணங்களை மேற்கொள்வது உகந்தது.

மேலும், இவ்வாறான வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்பவர்களால் மீண்டும் யாழ்ப்பாண குடாநாட்டில் மலேரியா அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-3)

# பல்கலை அருகே வாள்வெட்டு; சந்தேகநபர்கள் இருவர் கைது

## இருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ். பல்கலைக்கழகம் அருகே இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையாக திருநெல்வேலி - பரமேஸ்வரா சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் பகல்வேளை, பலர் பார்த்திருக்க இளைஞர் ஒருவர்மீது நால்வர் குழு வாள்வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றது.

இதுதொடர்பான விசாரணையில், முன்பகை காரணமாகவே இந்த வாள்வெட்டு இடம்பெற்றதாகவும், இதனை நடத்தியவர்கள் யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்திய வாள் ஒன்றும் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில், இருவர் தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் இருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

# இரத்த தான முகாம்!

யாழ்ப்பாணம், டிசெ. 17

பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்றைய தினம் வடக்கு மாகாணத்தில் இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளது.

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் சகோதரத்துவம் என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் நடக்கும் இரத்த தான முகாமின் தொடர்ச்சியாகவே வடக்கில் இரத்தான முகாம் நடத்தப்படுகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை காலை மணிக்கு யாழ்ப்பாணத்தில் கல்வியங்காடு ஞானோதயா வித்தியாலயம், வவுனியாவில் இளைஞர் படையணி நிலையம், முல்லைத்தீவில் மாஞ்சோலை மருத்துவமனை, கிளிநொச்சியில் மாவட்ட பொது மருத்துவமனை, மன்னாரில் மன்னார் பொது மருத்துவமனை என்பவற்றில் இரத்தான நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1

**03.12.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2

**03.12.2021**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
17.12.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com,
news@eelanadu.lk
021 730 1370

# தமிழர்களை உற்றுநோக்கும் சீனா?

இலங்கைக்கான சீனத் தூதுவர் நல்லூர் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார். தமிழ் மக்களுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை, வடக்கில் முதலீடுகளை மேற்கொள்வதில் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். இதற்கு முன்னரும் சீனத் தூதுவர் வடக்கிற்கு விஜயம் செய்திருக்கின்றார். ஆனால், இம்முறை இடம்பெற்றுள்ள விஜயம் சற்று வித்தியாசமான ஒன்றாகத் தெரிகின்றது. அண்மைக்காலமாக மேற்கு நாட்டு தூதுவர்கள் பலரும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியில் தான், சீனத் தூதுவரின் விஜயமும் இடம்பெற்றிருக்கின்றது. குறிப்பாக, தமிழர்களுக்கும் சீனாவிற்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகளை சுட்டிக் காட்டியிருக்கும் சீனத் தூதுவர், வடக்கின்மீதான தங்களின் ஈடுபாடுகளின் பின்னால் இரகசிய நோக்கங்கள் எதுவுமில்லையென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

தமிழ் மக்களின் பிரதான தலைமையான கூட்டமைப்பு மட்டுமன்றி, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவையும் சீனாவின் வடக்கு நோக்கிய ஆர்வத்தை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்பு இதனை பகிரங்கமாகவே கூறிவருகின்றது. இந்திய வெளிவிவகாரச் செயலர் ஹர்ஷ் வர்தனுடனான சந்திப்பின் போதும் - அதே வேளை, அண்மையில் சுமந்திரன் தலைமையிலான நிபுணர் குழுவினர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் சந்திப்புக்களை மேற்கொண்ட போதும், வட, கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தை தாம் விரும்பவில்லை என்பதை சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சீனத் தூதுவர், தமிழ் மக்களுடன் உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாக யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்களின் உரிமைசார் அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் இந்தியாவை நோக்கி ஓரணியிலும் - அதேவேளை, கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி 13இன் அடிப்படையில் இந்தியாவை அணுகுவது தொடர்பில் எதிரான நிலைப்பாட்டுடனும் இருக்கின்றது. இது இவ்வாறிருக்க, கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒற்றையாட்சியின் கீழான, 13ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியாவிடம் வலியுறுத்துவதை முற்றிலுமாக எதிர்க்கின்றது.

இவ்வாறான முரண்பாடுகளால், இந்தியாவை நோக்கி தமிழ் கட்சிகள் ஓரணியாக செல்வதில் இழுபறிகள் ஏற்பட்டிருக்கின்றன. மறுபுறம், கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்கும் அல்லது மாற்றியமைக்கும் வகையிலான புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. அதேவேளை, தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான குழுவினர், அமெரிக்காவின் ஊடாக சில மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக கூறிவருகின்றனர். ஜனவரியில் சில முடிவுகள் வெளிவரவுள்ளதாகவும் கூறுகின்றனர். இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால், இந்தியாவை நோக்கி தமிழர்கள் ஓரணியாக செல்வதில் இழுபறிகள் தோன்றியிருப்பது வெளிப்படையானது. எதிர்வரும் 21ஆம் திகதி, கொழும்பில் இடம்பெறவுள்ள கூட்டத்தின்போது, இரா. சம்பந்தன் இந்தியாவிற்கான கோரிக்கையில் கையெழுத்திட மறுத்தால் இந்தியாவை நோக்கி செல்லுதல் என்னும் நிலைப்பாடு பலவீனமடையும். இது மறுபுறம், தமிழர் விடயத்தில் இந்தியாவின் ஈடுபாட்டையும் - தலையிடுவதற்கான வாய்ப்புக்களையும் பலவீனப்படுத்தும்.

வரலாற்று ரீதியாக ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவே பிரதானமாக செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றது. ஆனால், அண்மைக்காலமாக இந்த விடயங்களில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருப்பதுபோல் தெரிகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், தமிழ் மக்களுடன் தங்களுக்கு வரலாற்று ரீதியான தொடர்பிருப்பதாகவும், தமிழர்களுடன் உறவுகளை வலுப்படுத்த விரும்புவதாகவும் சீனா கூறுகின்றது.

# யாழ்ப்பாணத்தில் சீன தூதுவர்!

-அலசுவது இராஜதந்திரி-

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென் ஹொங் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்திருந்தார். வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதையும் அங்கே யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

யுத்தம் முடிவுற்றதுமே இந்தியா வடக்கே அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் முந்திக்கொண்டது. வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டத்தைப் பொறுத்தவரை இந்தியா நிறையவே தொடர்பை கொண்டுள்ளது. 1983ஆம் ஆண்டு ஜூலை இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து இந்தியா இலங்கையின் வடக்கு - கிழக்கு விவகாரத்தில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருந்தது.

அச்சமயத்தில் பூகோள அரசியல் பெரிதளவிலான மாற்றங்களைக் கொண்டிருக்கவில்லை. தொண்ணூறுகளிலேயே அன்றைய சோவியத் ரஷ்யா நிலை தளர்ந்ததோடு ஐரோப்பாவின் புவிசார் அரசியல் எல்லைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இம்மாற்றங்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு புதிய அரசியல் வியூகங்களை ஐரோப்பா தொடர்பாக வடிவமைக்க வைத்திருந்தன.

அதேவேளை தூரகிழக்கில் பிரிட்டிஷாரின் ஆளுமைக்குட்பட்டிருந்த ஹொங்கொங் சீனா வசமாகியிருந்தது. இத்தகைய பின்னணியிலேயே இலங்கையின் வடக்கு - கிழக்கில் கூட பிரிவினைக்கான யுத்தம் முறுக்கேறியிருந்தது.

வடக்கு - கிழக்கு யுத்தம் வலுப்பெற்ற காலத்தில் சீனா இலங்கைக்கு இராணுவ ரீதியாக பெரிதும் உதவியிருந்தது. ஆயுத தளபாடங்கள் உட்பட ஆயுதப் படையினருக்கான பயிற்சிகளையும் சீனா வழங்கியிருந்தது. இத்தருணத்தில் அப்பாவி மக்கள், ஆயுதப் போராளிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் தஞ்சமடைந்திருந்தனர்.

வடக்கு - கிழக்கின் சில ஆயுதக் குழுக்களுக்கு இந்தியா பயிற்சிகளை வழங்கியதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுவதற்கான இடவசதிகளையும் வழங்கியிருந்தது. 2009ஆம் ஆண்டு வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுற்றதும் இந்தியாவும் , சீனாவும் போருக்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கை மூலம் இலங்கையில் தமது செல்வாக்கை நிலை நிறுத்தப் போட்டியிட்டிருந்தன.

இப்போட்டியில் தென்னிலங்கையில் துறைமுக நகர அபிவிருத்தி என்ற ரீதியில் மூன்று ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒரு நிலப்பரப்பையே சீனா உருவாக்கியுள்ளதோடு இலங்கையின் தென் முனையில் உள்ள நகரமான அம்பாந்தோட்டையிலிருக்கும் மத்தள பிரதேசத்தில் சர்வதேச தரத்திலான விமான நிலையமொன்றையும் சீனா நிறுவியுள்ளது.

19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆட்சிகள் இராணுவ ரீதியாகவே பெரிதும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், 21ஆம் நூற்றாண்டில் நவகாலனித்துவ விஸ்தரிப்பு என்பது இராணுவ ஆக்கிரமிப்புகளை தவிர்த்து பொருளாதார ரீதியான விஸ்தரிப்புகளையே கொண்டிருந்தது. இத்தகைய நவ காலனித்துவ பொருளாதார விஸ்தரிப்பை பொறுத்தவரை சீனாவின் செல்வாக்கிற்குட்பட்ட நாடாகவே இலங்கை விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு சீனத் தூதுவர் கீ சென் ஹொங் விஜயம் செய்த தருணத்திலேயே பங்களாதேஷ் ஸ்தாபிக்கப்பட்டதன் பொன் விழாக்கொண்டாடடங்களும் இடம்பெற்றிருந்தன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்குப் பாகிஸ்தான் என்றிருந்த இன்றைய பங்களாதேஷிலிருந்தும் பாகிஸ்தான் படைகள் விரட்டியடிக்கப்பட்டு அங்கே பங்களாதேஷ் உருவாக்கத்துக்காக போராடிய முக்திவாஹினி என்ற கிளர்ச்சி படைகளுக்கு பக்க பலமாக நின்ற நிலையில் பங்களாதேஷின் உருவாக்கத்துக்கு இந்தியா வழியமைத்திருந்தது.

பங்களாதேஷை உருவாக்கிய விதத்தில் இலங்கையிலும் வடக்கு - கிழக்கில் தனி நாடொன்றை உருவாக்குவதில் இந்தியா உதவ முடியும் என்ற நம்பிக்கையும் வடக்கு - கிழக்கின் ஆயுதப்போராட்ட அமைப்புகளிடையே நிலவியிருந்தது. ஏனெனில், கிழக்கு பாகிஸ்தான் என்று பங்களாதேஷ் இருந்த போது அங்கே பாகிஸ்தானிடமிருந்தும் விலகுவதற்கான யுத்தம் ஆரம்பித்தபோது பல்லாயிரக் கணக்கில் கிழக்கு பாகிஸ்தான் என்றிருந்த இன்றைய பங்களாதேஷிலிருந்தும் மக்கள் இந்தியாவுக்குள் அகதிகளாக புகுந்திருந்தனர்.

எனவே, அகதிகளின் தொகையை கட்டுப்படுத்த முடியாத நிலையிலும் இந்தியா கிழக்குப் பாகிஸ்தானுக்குள் புகுந்து பங்களாதேஷின் உருவாக்கத்தை இராணுவ நடவடிக்கை மூலம் உறுதிசெய்திருந்தது.

இந்நிலையில், வடக்கு - கிழக்கு ஆரம்பித்ததும் பல்லாயிரக்கணக்கில் கடல் மார்க்கமாக மக்கள் அகதிகளாக சென்றிருந்தனர். ஆயினும், இந்தியா வடக்கு - கிழக்கு யுத்தத்தை பெரிதும் தனது பிராந்திய நலன்களை கருத்தில் கொண்டே கையாண்டிருந்தது. அத்துடன், வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்தியாவின் தயவை இராஜதந்திர ரீதியாக பெற்றுக்கொள்வதில் தவறியதோடல்லாமல் இந்தியாவை இராணுவ ரீதியாகவும் பகைத்துக் கொண்டி ருந்தனர்.

எனவே, பங்களாதேஷ் தனது உருவாக்கத்தின் ஐம்பதாவது ஆண்டை கொண்டாடும் இத்தருணத்தில், இலங்கையின் வட பகுதிக்கு சீன தாதுவர் கீ சென் ஹொங் தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார். யுத்தத்தால் துவண்டு படிப்படியாக தன்னைக் கட்டியெழுப்பிவரும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு உலக நாடுகளின் உதவி இன்றியமையாததாகவே இருக்கின்றது.

இருந்தபோதிலும், புதிய பொருளாதார காலனித்துவ போட்டியின் கீழ் இந்தியாவும் , சீனாவும் இலங்கையை மையப்படுத்தி தென்னாசியாவில் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முயல்வதையும் இதன் ஒரு பகுதியா கவே சீன தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயமும் அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சந்தோஷமும் நிம்மதியும் குறைவின்றி இருக்கும். குடும்பச் சூழல் சிக்கலின்றி இருக்கும். நிதி நிலை உயரும். இதுவரை இருந்து வந்த தடைகள் மெல்ல விலகும்.

**இடபம்**
அதிகாரிகளின் அன்பை பெறுவீர்கள். சம்பள உயர்வு உண்டு. கடன் குறையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நண்பர்களின் எதிர்பாராத சந்திப்பும் ஆதரவும் உண்டு.

**மிதுனம்**
பதவி உயர்வு பற்றிய செய்தி வரும். மகிழ்வான நாள். வாழ்க்கைத் துணையோடு இணக்கமான சூழல் உண்டு. உங்களின் திறமை வேகம் எடுக்கும். அறிவுத் திறன் கூடும்.

**கடகம்**
பலரது உதவிகள் கிடைக்கும். பழைய வருத்தம் மறையும். சுகாதாரமான பழக்க வழக்கங்களைக் கைவிட வேண்டாம். பணியிடத்தில் சில சங்கடங் களை சந்திப்பீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் பொறுப்பான செயல்பாடுகள் மகிழ்ச்சி தரும். பேச்சில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரிவடையும். பணம் சேரும். முயற்சியில் இருந்த தடைகள் விலகும்.

**கன்னி**
தொழில், பணியில் சாதகமான போக்கு நிலவி மகிழ்விக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தினரின் உதவி உண்டு. உங்கள் முயற்சியைத் தடுத்தவர் விலகுவார். கோபம் தீரும்.

**துலாம்**
குழந்தைகள் தவறை உணர்வர். மகிழ்ச்சியாக பொழுது போகும். சிக்கல் தரும் கோபம் வேண்டாம். பேச்சைக் குறைக்கவும். உங்கள் மனசாட்சிப்படி செயல்படுங்கள். குறுக்கு வழியை நாட வேண்டாம்.

**விருட்சிகம்**
உடல் ஆரோக்யத்தில் அதிகக் கவனம் செலுத் துவீர்கள். சிலருக்கு இடமாற்றம் உறுதியாவதால் மகிழ்ச்சி வரும். வாழ்வில் உயர்வு தரக்கூடிய சந்தோஷமான சந்திப்பு உண்டு.

**தனுசு**
பிறரை குறை கூற வேண்டாம். வரவும், செலவும் சமமாயிருக்கும். செலவில் கவனம் தேவை. மனசாட்சியின் படி நடப்பீர்கள். முயற்சியை அதிகரிப்பதால் முன்னேற்றம் உண்டு.

**மகரம்**
எதிர்பார்த்த பணம் சிறு படபடப்பிற்குப் பின் வந்து சேரும். சொத்து தொடர்பான விஷயத்தில் இருந்த இழுபறி நீங்கும். இடமாற்றம் உண்டாகும். பயணம் ஒன்று மகிழ்ச்சி தரும்.

**கும்பம்**
சங்கடங்களும் சந்தோஷங்களும் இன்று மாறி மாறி இருக்கும். கற்பனை பயம் வேண்டாம். சேமிப்பில் ஆர்வம் உண்டாகும். நிதி, சொத்து பற்றி முடிவெடுப்பதில் கவனம் தேவை.

**மீனம்**
வாழ்க்கைத்துணையுடன் தேவையற்ற வாக்கு வாதம் செய்ய வேண்டாம். படபடப்பு தரும் செயல்களை இன்று செய்ய வேண்டாம். பெரிய விஷயம் எதிலும் ஈடுபட வேண்டாம்.

# அ.தி.மு.க கூட்டணியில்தான் பா.ம.க. இப்போதும் உள்ளதா?

## ராமதாஸ்தான் சொல்ல வேண்டும் என்கிறார் எடப்பாடி

சென்னை, டிசெ. 17

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம. க. உள்ளதா என்பதை யிட்ட பாமக நிறுவுனர் ராமதாஸிடம்தான் கேட்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க. கூட்ட ணியில் இடம்பெற்ற பா.ம.க 23 இடங்களில் போட்டியிட்டு 5 இடங்களில் மட்டுமே வெற்றிப்பெற்றது.

இந்நிலையில், பா.ம.க நிர்வாகிகளுடனான சந்திப்பு ஒன்றில் பேசிய அக்கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ், "சட்டசபை தேர்தலில் கூட் டணி கட்சிகள் கூட்டணி தர் மத்தை கடைபிடிக்கவில்லை.



பாட்டாளி மக்கள் கட்சி வெற்றிப்பெறக்கூடாது என்பதற்காக கூட்டணி தர்மம் மீறி, அதர்மமாகிவிட்டது. நாம் 23 இடங்களிலும் அல்லது குறைந்தபட்சம் 15 இடங்க ளிலோ வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால் கூட்டணிக் கட்சிகள் கூட்டணி தர்மத்தை மீறியதால் பாமக 5 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந் தது," என கூறினார்.

இதற்கு எதிர்கட்சி தலை வரும், அ.தி.மு.க இணை ஒருங் கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி நேற்று பதிலளித் துள்ளார்.

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. உள்ளதா? என நிருபர் கள் கேள்வி எழுப்பியதற்கு, 'நாங்கள் என்ன துரோகம் இழைத்தோம் என பாமக தான் தெளிவுபடுத்த வேண்டும். அதிமுக கூட்டணியில் பா.ம. க. உள்ளதா என்பதையிட்ட பா.ம.க. நிறுவுனர் ராமதாஸி டம்தான் கேட்க வேண்டும்.

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் உள்ளாட்சித் தேர்தலின் போதே கூட்டணி இல்லை என்று சொல்லி விட்டார். பா.ம.க. மற்ற தொகுதிகளில் ஜெயிக்க மக்களைத்தான் வாக்க ளித்திருக்க வேண்டும்" என கூறி னார்.

# வன்னியர் ஒதுக்கீடு குறித்த தீர்ப்புக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு

சென்னை, டிசெ. 17

வன்னியருக்கு வழங்கப் பட்ட உள்ஒதுக்கீட்டை இரத்து செய்த சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் நேற்று தெரிவித் துள்ளது.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் உள்ள வன்னிய சமூக மக்களுக்கு கடந்த பிப்ரவரி மாதம் 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டை அ.தி.மு.க அரசு அளித்தது. சட்டமன்றத் தேர் தலை கணக்கில் வைத்தே அ.தி. மு.க அரசு இடஒதுக்கீடு அளித்ததாகவும் பேசப்பட்டது.

அதேநேரம், சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த தி.மு.க, 10.5



சதவிகித இடஒதுக்கீட்டுக்கு அரசாணை பிறப்பிப்பதில் தாமதம் செய்வதாகக் கூறப்பட் டது.

இதுதொடர்பாக, பா.ம.க நிறுவனர் ராமதாஸ் உள்பட வன்னியர் அமைப்புகள் அறிக்கை வெளியிட்டன. இதனைத் தொடர்ந்து 10.5 சதவிகித இடஒதுக்கீடு தொடர்பாக தமிழ்நாடு அரசு அரசாணையை வெளியிட்டது.

இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் 25க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகள் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் நீதிபதிகள் எம்.துரைசாமி, கே. முரளிசங்கர் ஆகியோர் அடங் கிய அமர்வு விசாரித்தது.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், வன்னியர் சமூகத் தினருக்கான இடஒதுக்கீடு செல்லாது எனத் தீர்ப்பளித் தனர். இதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

"தீர்ப்புக்கு தடை விதிக்க விரும்பவில்லை' எனத் தெரிவித் துள்ள நீதிபதிகள். 10.5 சதவிகித இடஒதுக்கீட்டில் ஏற்கெனவே நடைபெற்ற பணி நியமனம், மாணவர் சேர்க்கை ஆகியவற் றில் மாற்றம் செய்யக் கூடாது எனவும் குறிப்பிட்டுவிட்டு பெப்ரவரி 15 க்கு வழக்கை ஒத்திவைத்தனர்.

# நைஜீரியாவிலிருந்து வந்த ஒருவருக்கு தமிழ்நாட்டில் ஓமைக்ரோன் தொற்று


சென்னை, டிசெ. 17

நைஜீரியாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த ஒருவருக்கு ஓமைக்ரோன் பாதிப்பு இருப்பது உறுதிசெய்யப்பட்டி ருப்பதாக தமிழ்நாடு மருத்துவத் துறை அமைச்சர் மா. சுப்பிரம ணியன் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் செய்தியா ளர்களிடம் பேசிய அவர், "வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவருக்கு 41 பேர் கொரோனா வால் பாதிக்கப்பட்டு தமிழ் நாட்டில் சிகிச்சை பெற்று வரு கிறார்கள். நைஜீரியாவிலிருந்து தோஹா வழியாக சென்னைக்கு வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. அவர்களுக்குச் செய்யப்பட்ட நவீன பரிசோதனையில் "எஸ் ஜீன் டிராப்" இருப்பது கண்ட றியப்பட்டது.

அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த 6 பேருக்கும் "எஸ் ஜீன் டிராப்" இருப்பது கண்டறி யப்பட்டது. மொத்தமாக இந்த ஏழு பேருக்குமே சிறிய அள வில்தான் பாதிப்பு இருந்தது. இதையடுத்து இவர்கள் தீவிர கண்காணிப்பில் கொண்டுவரப் பட்டு, கிங் இன்ஸ்ட்டிடியூட் டில் சேர்க்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு, இவர்களோடு தொடர்பில் இருந்த ஒருவர் வளசரவாக்கத்தில் இருந்தார். அவருக்கும் "எஸ் ஜீன் டிராப்" இருப்பது கண்டறியப்பட்டுள் ளது. இவர்களது மாதிரிகள் சேகரிக்கப்பட்டு புனே, பெங்க ளூர், ஹைதராபாதில் உள்ள சோதனைக் கூடங்களுக்கு அனுப் பப்பட்டன.

இதில் செய்யப்பட்ட சோதனையில் ஒருவருக்கு



ஓமைக்ரோன் பாதிப்பு இருப் பது தெரியவந்துள்ளது. குடும்பத்தார் ஆறு பேருக்கும் வளசரவாக்கத்தைச் சேர்ந்த ஒரு வருக்கும் சோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் ஓமைக்ரோன் பாதிப்பை எதிர்கொள்ள மருத் துவக் கட்டமைப்பு மேம்படுத் தப்பட்டிருப்பதாகவும் ஒரு லட் சத்திற்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் உருவாக்கப்பட்டிருப் பதாகவும் அமைச்சர் மா. சுப் பிரமணியனும் மருத்துவத் துறை செயலர் தெரிவித்தனர்.

# உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படாது!

## அடித்து கூறுகிறது ஆளுங்கட்சி



**கொழும்பு, டிசெ. 17**

**2022 ஆம் ஆண்டு இலங்கையில் பஞ்சம் ஏற்படும் என எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டி வரும் நிலையில் அந்தக் குற்றச்சாட்டை ஆளுங் கட்சி நிராகரித்துள்ளது.**

"எக்காரணங்களுக்காகவும் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படாது."- என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

"கொரோனா வைரஸ் தொற்றால் உலகம் முழுவதிலும் உற்பத்திப் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை சவாலாக ஏற்று நாமும் உற்பத்திப் பொருளாதாரச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளோம்.

அதேவேளை, எதிரணியினர் ஆட்சியைப் பிடிப்பதற்கு பதிலாக போலி கருத்துகளை பரப்பி, மக்களை தவறாக வழி நடத்த முற்படுகின்றனர்."-என வும் அவர் கூறினார். (அ)

# சீன உர நிறுவனத்துக்கு இழப்பீடு; மைத்திரிபால கடும் எதிர்ப்பு!



கொழும்பு, டிசெ. 17

"சீன உர நிறுவனத் துக்கு இழப்பீடாக ஒரு சதம்கூட செலுத் தக்கூடாது. அத் துடன், சர்ச்சைக்குரிய சேதனப் பசளையை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தவர்கள் தண் டிக்கப்பட வேண்டும்." என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"சீன நிறுவனத்திடமிருந்து உரம் பெற்றுக்கொள்வதற்கு முன்ன தாக அது தொடர்பில் ஆராயப்பட்டிருக்கும். பாராளுமன்ற உறுப் பினர்கள் அல்லது நிபுணர்கள் எவரேனும் சீனா சென்று விடயங் களை ஆராய்ந்த பின்னரே உரத்தை நாட்டுக்கு கொண்டுவர தீர்மானித்திருப்பார்கள்.

எனவே, அவர்களுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். அவர்களிடமிருந்து பணத்தை அறிவிடவேண்டும். மக்கள் பணத்தில் இருந்து ஒரு சதம்கூட செலுத்தப்படக்கூடாது."-என்றார். (அ)

# கட்டானை பிரதேச சபையில் பெரமுனவின் பட்ஜெட் தோல்வி

கொழும்பு, டிசெ. 17

பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மை பலத்தைக் கொண்ட கட்டானை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டம் 8 மேலதிக வாக்குகளால் தோற கடிக்கப்பட்டுள்ளது.

பிரேரணைக்கு ஆதரவாக 17 வாக்குகளும் எதிராக 25 வாக்கு களும் அளிக்கப்பட்டுள்ளன.

கட்டானை பிரதேச சபை யின் அமர்வு நேற்று முன் தினம் கட்டானை பிரதேச சபையின் தலைவர் நந்த விஜேரத்ன சில்வா தலைமையில் இடம் பெற்றது.

மக்கள் ஐக்கிய முன்ன ணியின் 15 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணி யின் மூன்று உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும், சுயேச்சை உறுப்பி னர் ஒருவரும் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களித்தனர்.

சுதந்திரக் கட்சியின் 7 உறுப்பினர்களும், பொதுஜன பெரமுனவின் 4 உறுப்பினர்க ளும், ஐக்கிய தேசியக் கட்சியின் 5 உறுப்பினர்களும், சுயேச்சை உறுப்பினர் ஒருவரும் பட்ஜெட் டுக்கு ஆதரவாக வாக்களித்த னர்.

இதனால் 8 மேலதிக வாக்கு களால் பட்ஜெட் தோற்கடிக்கப் பட்டது. (அ)

# லிட்ரோ நிறுவனத்தின் மற்றுமொரு எரிவாயு கப்பல் தொடர்பிலும் ஐயம்

கொழும்பு, டிசெ. 17

லிட்ரோ நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு தற்போது உஸ்வெட்டகெய் யாவ கடற்பகுதியில் நங்கூர மிட்டுள்ள மற்றுமொரு கப்ப லில் அடங்கியுள்ள சமையல் எரிவாயுவின் செறிமானம் தொடர்பிலும் ஐயம் நிலவு கின்றது. இதற்கு முன்னர் தரம் இன்றி சமையல் எரிவாயுவை இறக்கு மதி செய்த நிறுவனமே இதனை யும் இறக்குமதி செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது குறித்த கப்பலில் உள்ள சமையல் எரிவாயு மாதிரி, இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் ஆய்வகத் துக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. கடந்த சில தினங்க ளுக்கு முன்னதாக தரம் இன்றி இறக்கு மதி செய்யப்பட்ட சமையல் எரிவாயுவை தரை யிறக்கவேண் டாம் என நுகர் வோர் அதிகார சபையின் அதிகாரிகள் லிட்ரோ நிறுவனத் துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தனர். இதேவேளை, 20 மில்லியன் அமெரிக்க டொலர் நாணயக் கடனாக விடுவிக்கப் படுமாயின் தமது நிறுவனத்தின் ஊடாக லிட்ரோ நிறுவனத்துக் கும் நாளாவிய ரீதியாக சமையல் எரிவாயுவை விநியோ கிப்பதற்கான இயலுமை உள்ள தாக லாப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்வ். கே எச்.வேகப் பிட்டிய தெரிவித்தார். (அ)

# பண்டிகைக் காலத்தையொட்டி மக்களுக்கு நிவாரணப் பொதி

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு சம்பா அரிசி உள்ளிட்ட அத்தியாவ சிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி ஒன்றை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டி பொரு ளாதார மத்திய நிலையத்தில் உள்ள சதொச கிளையில் நேற்று முன்தினம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டபோது ஊடகங்க ளுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் இதனைத் தெரி வித்தார்.

இதேவேளை, நாட்டில் உள்ள விசேட பொருளாதார நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் உயர் வடைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீர் தாங்கியில் விழுந்து ஆண் குழந்தை மரணம்

## இரத்தினபுரியில் சோகம்

கொழும்பு, டிசெ. 17

இரத்தினபுரியில் நீர் தாங்கியில் விழுந்து ஒன்றரை வருட குழந்தையொன்று பலி யாகியது.

இரத்தினபுரி மஹவலவத்த இலக்கம் 246இல் வசிக்கும் ஒன்றரை வயது உடைய ரிஸ்வின் என்ற ஆண் குழந் தையே இவ்வாறு உயிரிழந் தது.

வீட்டின் அருகிலுள்ள நாலு அடி நீளம், அகலம் கொண்ட நீர்த்தாங்கியில் நீர் நிரம்பி இருந்ததாகவும் தாயார் துணிகளை கழுவி அதனை காயவைக்கச் சென்ற சமயம் குழந்தை நீர்த்தாங் கியில் விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தை துடித்துக் கொண்டிருப்பதை கண்டு உடனடியாக வைத்தியசா லைக்கு கொண்டு சென்றபோதிலும் குழந்தை உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

# நேற்று முதல் டிசெ. 31 வரையும் புதிய சுகாதார வழிகாட்டல்கள்

கொழும்பு, டிசெ. 17

நேற்று முதல் டிசெம்பர் 31 வரையான காலத்துக்கு நடை முறைக்கு வரும் புதிய சுகாதார வழிகாட்டி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, திருமண நிகழ்வுகளில் மண்டபக் கொள்ளளவில் 50 சதவீதமானோர் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், திருமண நிகழ்வுகளில் மதுபானப் பாவனைக்கு முன்ன தாக விதிக்கப்பட்டிருந்த தடை இந்த புதிய சுகாதார வழிகாட்டியின் ஊடாக தளர்த்தப்பட்டுள்ளது. இதுதவிர, மரண சடங்குகளில் ஒரு தட வையில் 30 பேர் பங் கேற்க முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பா ளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார். (அ)

# மண்ணெண்ணெய், மின்சார அடுப்புகளின் விலை உயர்வு

## தொடரும் எரிவாயு சிக்கலே காரணம்


கொழும்பு, டிசெ. 17

மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்புகளின் விலைகள் சந்தையில் சடுதியாக அதிகரித்துள்ளன.

சமையல் எரிவாயு விநியோ கம் சீரான நிலைக்கு திரும்பாத நிலையில் தொடர்ந்து இடம் பெற்று வரும் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் காரண மாக பொதுமக்கள் மாற்று நடவடிக்கையாக சந்தையில் மண்ணெண்ணெய் அடுப்பு மற்றும் மின்சார அடுப்பைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால் அவற்றின் விலைகள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ள னர். 2,000 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட மண்ணெண் ணெய் அடுப்பு ஒன்றின் விலை யானது தற்போது 8,000 ரூபா யாக அதிகரித்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

அதேநேரம், புறக்கோட்டை மற்றும் புறநகர்பகுதிகளில் மண்ணெண்ணெய் அடுப்பு இல் லாமையினால் நுகர்வோரும், வர்த்தக நிலைய உரிமையா ளர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். (அ)

# வடமராட்சி கிழக்கு புல்லாவெளியில் செபஸ்தியார் ஆலய முகப்பு இடிந்தது!

## இளைஞர் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடமராட்சி கிழக்கு - புல்லாவெளி செபஸ்தியார் ஆலயத்தின் முகப்பு நேற்று அதிகாலை திடீரென இடிந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வடமராட்சி கிழக்கு - புல்லாவெளி செபஸ்தியார் ஆலயத்துக்கு சென்ற ஒரு குடும்பம் நேற்று முன்தினம் இரவு அங்கு தங்கியுள்ளது.

அவர்கள் அந்த ஆலயத்தின் முகப்புப் பகுதியில் இரவு தங்கியிருந்த நிலையில் நேற்று வியாழன் அதிகாலை 5.30 மணியளவில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

ஆலயத்தின் முகப்பு மண்டபப் பகுதி திடீரென இடிந்து விழுந்ததில் அதன் கீழ் தங்கியிருந்த இளைஞன் படுகாயமடைந்தார்.

இந்த சம்பவத்தில் கட்டைக்காட்டைச் சேர்ந்த வினோத் என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த அனர்த்தத்தில் அவரது மனைவிக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை. அவர்களது மோட்டார் சைக்கிளும் பலத்த சேதம் அடைந்தது.

ஆலய முகப்பு திடீரென இடிந்து விழுந்தமைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. (அ-02)

# கிண்ணியா படகு விபத்து; சந்தேகநபர்களுக்கு பிணை

கிண்ணியா, டிசெ. 17

கிண்ணியா குறிஞ்சாக்கேணி மிதக்கும் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் ஐந்து இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் படகுப்பாதை கவிழ்ந்ததில் ஆறு பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் கிண்ணியா பொலிஸார் பாதுகாப்பு இல்லாத நிலையில் படகுப்பாதையை செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 17

பிரதேச சபை, நகரசபை மற்றும் மாநகரசபைகளின் பதவி காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

மேற்படி சபைகளின் பதவிக் காலம் 2022 பெப்ரவரி மாதம் நிறைவுக்கு வரும் நிலையிலேயே அதன் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. விரைவில் தீர்மானம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. (அ)



# மிகச்சிறப்பாக நடைபெற்றது மாந்தை மேற்கு கலாசார விழா

மன்னார், டிசெ. 17

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகமும், மாந்தை மேற்கு பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச கலாசார விழா நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே. அரவிந்தராஜ் டெனிசியஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

மேலும் விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் இராமநாதன் வவுனியன் ஆதி அருணாச்சலம், மடு வலயக்கல்விப் பணிப்பாளர் தர்மலிங்கம் முகுந்தன் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, தெரிவு செய்யப்பட்ட மாந்தை மேற்கு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கலை, இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# ஜனவரியில் அமைச்சரவை மாற்றம்?

கொழும்பு, டிசெ. 17

2022 ஜனவரியில் அமைச்சரவையில் சில மாற்றங்கள் இடம்பெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசிலுள்ள சில அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பல தரப்பினரும் கடந்த காலங்களில் முறைப்பாடுகளை முன்வைத்தனர். ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

இந்நிலையில் அமைச்சுகளின் நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன, திட்டங்கள் உரியவகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பிலும் ஜனாதிபதி ஆராய்ந்துள்ளார்.

அந்த குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையில் மறுசீரமைப்பு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவை மாற்றத்துக்கு ஆரம்பத்தில் அதிருப்தியை வெளியிட்டிருந்த பிரதமரும் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளாரெனவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)




# நல்லூர் ஆலயத்தில் சீனத் தூதர் வழிபாடு

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் மற்றும் அதிகாரிகள் நேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்து சமய முறைப்படி வேட்டி அணிந்து அவர்கள் ஆலயத்துக்கு வருகை தந்தனர்.

கோவிட்-19 சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் சீன அதிகாரிகள் வழிபாடுகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். (அ-03)

# ஆசியாவின் ராணியை சொந்தமாக்குவதில் அமெரிக்கா - சீனா இடையே கடும் போட்டி



கொழும்பு, டிசெ. 17

இலங்கையில் கண்டறியப்பட்ட 'ஆசியாவின் ராணி' என பெயரிடப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய நீலக்கலை கொள்வனவு செய்வதில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி- பட்டுகெதர பகுதியில் 310 கிலோகிராம் எடைகொண்ட இந்த நீலக்கல், அண்மையில் கண்டுப்பிடிக்கப்பட்டது.

அந்தவகையில் தற்போது இணையத்தின் ஊடாக இடம்பெறும் சர்வதேச ஏல விற்பனையில், குறித்த நீலக்கல்லை முன்வைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியம், ஆரம்பத்திலேயே விலைமனுக் கோரலுக்கான விண்ணப்பத்தை முன்வைத்துள்ள நிலையில், சீனாவும் இந்தப் போட்டியில் இணைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இத்தகைய நிலையில் அமெரிக்காவும் வாஷிங்டன் நகரிலுள்ள நூதனசாலையில் குறித்த கல்லை காட்சிப்படுத்துவதற்காக ஏலத்தில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு சொந்தமான ஆய்வகத்தில் இது தற்போது பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)






# சீன அரசு தொடர்ந்தும் யாழ்.மக்களுக்கு உதவும்

## அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

**சீன அரசாங்கம் தொடர்ந்து யாழ்ப்பாண மக்களுக்கு உதவிகளை வழங்கும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் யாழ்ப்பாண மீனவர்களுக்கு வலைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நல்லுறவு நிலவி வருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே சீன தூதரகமானது யாழ்ப்பாண மக்களுக்கு மீன்பிடிவலை மற்றும் உலர் உணவுப் பொதிகளை வழங்குகின்றோம்.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் ஓர் ஆரம்ப நிகழ்வாகவே நாங்கள் கருதுகின்றோம். இன்று ஆரம்பமான இந்நிகழ்வானது சீனா மற்றும் வடக்கு மக்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் என நாங்கள் கருதுகின்றோம் .

குறிப்பாக சீனத் தூதரகமானது இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக உலகளாவிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த கொரோனா வைரஸ் தாக்கத்தின்போது சீனா இலங்கைக்கு பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ளது.

அதேபோல வடக்கு-கிழக்கிலுள்ள மக்களுக்கான தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதில் சீனா பெரும்பங்காற்றியுள்ளது.

அதேபோல் நேற்று (நேற்று முன்தினம்) வடக்கு மாகாண ஆளுநரிடம் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் என ஐந்து நீர் சுத்திகரிக்கும் இயந்திரப் பொறிமுறையையும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்துள்ளோம். அதேபோல் 5 மடிக்கணினிகள் மற்றும் ஒரு தொகுதி புத்தகத்தையும் பொது நூலகத்துக்கு வழங்கியுள்ளோம்.

எனவே, இவை அனைத்தும் ஓர் ஆரம்பமாகவே நாங்கள் கருதுகின்றோம். எதிர்காலத்தில் சீனத் தூதரகம் யாழ்ப்பாண மக்களுக்கு தொடர்ச்சியான உதவிகளை வழங்கும்- என்றார். (அ-03)

# யாழ்ப்பாணம், மன்னார் மீனவர்களுக்கு 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 17

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.75 மில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும், 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகளையும் வழங்கினார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரின் அழைப்பை ஏற்று, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு உதவித் திட்டங்களை பயனாளர்களுக்கு வழங்கினார்.

கொரோனா பரவல் உட்பட பல்வேறு காரணங்களினால் வாழ்வாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை முன்வைத்த நிலையில், சீனாவினால் முதல் கட்டமாக இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# ஹக்கீம் கிண்ணியா விஜயம்

திருமலை, டிசெ. 17

திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட குறிஞ்சாக்கேணிக்கும், கிண்ணியா நகர சபைக்குட்பட்ட பெரியாற்று முனைக்கும் நேற்று முன் தினம் அவர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது முன்னாள் கிண்ணியா நகர சபைத் தலைவர் டாக்டர் ஹில்மி மஹ்ரூப், மூதூர் பிரதேச சபைத் தலைவர் அரூஸ் மற்றும் உறுப்பினர்களும் இணைந்திருந்தனர். (அ)



# பட்டதாரிகளுக்கு 31ஆம் திகதிக்கு முன் நிரந்தர நியமனம்

கொழும்பு, டிசெ. 17

அரச சேவை பயிற்சிக்காக இணைக்கப்பட்டுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொடுக்கவுள்ளதாக அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே. ஜே. ரத்னசிறி தெரிவித்தார். (அ)

# பாராளுமன்று ஒத்திவைப்பால் மக்களுக்கு பல பிரச்னைகள்!

## விசனம் வெளியிடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 17

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுகின்றமையினால், பொது மக்கள் பல பிரச்னைகளை எதிர்நோக்க நேரிடும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

புத்தளத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹந்துன்நெத்தி இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் நடவடிக்கையால் யுகதானவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆராய்வதற்கான சாத்தியக்கூறுகளை அரசு முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக அவர் கூறினார்.

மேலும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டபோதிலும், பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எரிவாயு தொடர்பான விபத்துக்களால் பொதுமக்களும் ஆபத்தில் உள்ளனர் எனவும் ஹந்துன்நெத்தி கவலை வெளியிட்டார்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் தங்கள் பிரச்னைகளை மக்கள் பிரதிநிதிகள் ஊடாக தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்த ஹெந்துன்நெத்தி, இது போன்ற நேரத்தில் பொறுப்பான நிதி அமைச்சர் நாட்டில் இல்லை என்றும் கூறினார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை என்றும், வர்த்தகர்கள் டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி - ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச பொறிமுறைமை சீர்குலைந்துள்ளது. அதன் பொறுப்பை ஏற்க அமைச்சர் எவரும் இல்லை எனவும் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.(அ)

# சண் அங்கிள் காலமானார்

வடமராட்சி டிசெ,17



நகைச்சுவை எழுத்தாளராக அறியப் பட்ட பொன்னையா சண்முகநாதன்(சண் அங்கிள்) நேற்று காலமானார். இறக்கும் போது அவருக்கு 82 வயது.

12-02-1939இல் சங்குவேலியில் பிறந்த அவர் திருமணத்தின் பின்னர் கந்தரோடையில் வாழ்ந்து வந்தார். கலைச்செல்வி பண்ணைக்கூடாக எழுத்துலகுக்குள் பிரவேசித்த அவர் சிறுகதைகளையும், நகைச்சுவைப் புதினம் மற்றும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்கள் வெள்ளரி வண்டி, இதோ ஒரு நாடகம், பெண்ணே நீ பெரியவள்தான், கொழும்புப்பெண், நினைக்க சிரிக்க சிந்திக்க, சிரிப்போம் சிந்திப்போம், நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள் ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் ஞான ஏந்தல் விருது, கலாபூசணம் (2008) விருது உட்பட பல விருதுகளைப் பெற்ற அவர் பத்தி எழுத்துக்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறந்த பத்தி எழுத்துக்கான ஊடகத்துறை விருதையும் 2004 ஆம் ஆண்டு பெற்றவராவார்.

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதுதவிர இவரது சிறுகதைகள் நகைச்சுவை கட்டுரைகள் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

அவரது இறுதி நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை முற்பகல் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.(அ-02)

# எரிவாயு பிரச்னைக்கு 2,3 வாரங்களில் தீர்வு

## மீண்டும் கூறுகிறது அரசு

கொழும்பு, டிசெ. 17

நிலவும் எரிவாயு தொடர்பான பிரச்னைக்கு அடுத்த இரண்டு மூன்று வாரங்களுக்குள் தீர்வு காணப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜனக வக்குமுபுர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலையிட்டு பிரச்னையை தீர்த்து வைத்ததாகவும், தர உறுதிப் பரிசோதனையின் பின்னரே எரிவாயு இறக்குமதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

லேபிள்கள் வழங்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் தொடர்பாக பல கவலைகள் எழுந்துள்ளதை அவதானிக்க முடிந்தது என்றும் அவர் கூறினார்.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தலையிட்டுள்ளதாகவும், எனினும் நாட்டில் இரண்டு எரிவாயு நிறுவனங்களே உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் வக்கும்புர குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (அ)

ரங்க சிறிலால்



# இலங்கையை கடன் பொறிக்குள் சிக்க வைப்பது சீனாவா? மேற்குலக நாடுகளா?

இராஜிய உறவு உலகில் அண்மை காலமாக அதிகம் பேசப் படும் ஒரு விடயமாக “சீன கடன் பொறி” காணப்படுகின்றது. “சீனாவின் கடன் பொறியில்” இலங்கை சிக்கியுள்ளதாக பல காலமாக குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு சீனா, கடனை வழங்கி அந்நாடுகளின் பொருளாதார மையங்களை சீனா கையகப்படுத்துவதாக மேற்குலக நாடுகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. இந்த குற்றச்சாட்டுக்களை கொழும்பிலுள்ள சீன தூதரகம் நிராகரித்து, மாறுப்பட்ட பதிலொன்றை வழங்கியது. ‘மேற்குலக நாடுகளின் கடன் பொறியிலிருந்து’ இலங்கையை சீனாவே காப்பாற்றி வருவதாக சீன தூதரகம் பதிலளித்தது.

இலங்கைக்கு மாத்திரமன்றி, ஆப்பிரிக்க வளையத்திலுள்ள சில நாடுகளின் துறைமுகங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் பலவற்றுக்கான கடனை சீனாவே வழங்கியுள்ளது.

“உகண்டாவை மூழ்கடித்த சீன கடன் பொறி, இலங்கையையும் மூழ் கடிக் கின்றது” என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டிருந்தார்.

“சீனாவினால் வழங்கப்பட்ட கடனை மீளச் செலுத்த முடியாமையினால், யுகாண்டாவிலுள்ள ஒரே யொரு சர்வதேச விமான நிலையம் தற்போது அவர்களுக்கு இல்லாது போயுள்ளதாக, ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. நாட்டுக்குள் பிரவேசிக்கும் ஒரேயொரு மற்றும் பிரதான நுழைவுவாயில், வேறொரு நாட்டிற்கு உரித்தாகின்றமை யானது, உகண்டா மக்களுக்கு எந்த ளவிற்கு பிரச்னையான அனுபவமாக இருக்கும்?” என ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

“ராஜபக்ஷ ஆட்சியை போன்றே, யுகாண்டாவின் ஊழல் மிகுந்த அரசியல் தலைமைகளின் முன்னுரிமைகள் மற்றும் தேசிய திட்டமொன்று இல்லாது கமிஷன்களை பெற்றுக்கொள்வதற்காக பேராசையுடன் சீனாவிடமிருந்து பெருமளவிலான தொகை கடனை பெற்றுக்கொண்ட திமிர்பிடித்த முடிவின் பெறும்பேறு இது” என அவரது பேஸ்புக் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இராஜிய ரீதியிலான விவகார வரையறைகளுக்கான எல்லையிலிருந்து அப்பால் சென்று, வேறொரு நாட்டின் “அரசியல் மற்றும் இராணுவ அபிலாஷைகளுக்காக” அந்த முகாமில் இணைவதன் ஊடாக, தமது சொந்த நாட்டின் இறையாண்மையை இழப்பதானது, நாட்டின் தேசிய அபிலாஷைகளை நேரடியாகவே அழிப்பதாகும்” என சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக, நாட்டிற்கு தேவையற்ற திட்டமாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம், இந்து சமுத்திரத்தின் கடற்படை வழித்தடமாக சீனாவினால் கையகப்படுத்தப் படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

“சீனாவின் கடற்படை தளமாகவே, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட QUAD நாடுகள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை அவதானித்து வருகின்றன. இது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பாரிய பிரச்னை. முட்டாள் தனமான முடிவுகளின் விளைவாக, எதிர்வரும் 60 - 80 மாதங்களில் பிராந்தியத்தில் தவிர்க்க முடியாத அதிகார போராட்டத்தில் தவிர்க்க முடியாத விளைவுகளை அனுபவிப் போம்” என, பீல்ட் மார்ஷல் கூறுகின்றார்.

“உரம் ஏற்றிய கப்பல் விவகாரத்தில், சூடுபட்ட பன்றியை போல இலங்கையிலுள்ள சீன தூதரகம் போராடி வருகின்றது. இவ்வாறான சூழலில், எவ்வாறு நடந்துகொள்வது என்பது தற்போது எமக்கு மிகத் தெளிவாக தெரிகின்றது. எதிர்வரும் காலங்களில் இந்த விவகாரத்தை சரி செய்துக்கொள்ள வேண்டும்” என அவர் தனது பதில் தெரிவித்துள்ளார்.

**உகண்டா சர்வதேச விமான நிலையத்திற்கு உண்மையில் என்ன நேர்ந்தது?**

சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்த முடியாமையினால், உகண்டாவிலுள்ள ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகம், அந்த நாட்டு அரசாங்கத் திடமிருந்து இல்லாது போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தன.

உகண்டாவிடமிருந்து என்டபே சர்வதேச விமான நிலையம் இல்லாது போவதை தவிர்க்கும் வகையில், சீனாவுடன் 2015 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்ள உகண்டா முயற்சித்து வருவதாகவும் சில ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

என்டபே சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்காக, சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து உகண்டா, 200 மில்லியன் டொலர்கள் கடனாக பெற்ற தாகவும், அந்த கடன் நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டாம் என, உகண்டா அரசாங்கத்தின் பிரதம சட்ட அதிகாரி, அந்த நாட்டு நிதி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ள தாகவும் ப்ளும்பெர்க் இணையதளம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உகண்டாவின் என்டபே சர்வதேச விமான நிலையத்தை சீனா கையகப்படுத்தியுள்ளதாக வெளியான செய்தியை, கொழும்பிலுள்ள சீன தூதரகம் மறுத்துள்ளது.

இந்த செய்தியில் “உண்மை இல்லை” என சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

“சீனா, உகண்டாவின் விமான நிலையத்தை கையகப்படுத்தியுள்ளது” என அப்பட்டமான பொய்யை உகண்டா சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் ஊடகப் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீன தூதரகம், ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

‘கடன் பொறி’ தொடர்பிலான கதை மேற்குலக காலனித்துவத்துடன் மாத்திரமே உருவானது. இலங்கையில் இதனை மீண்டும் மீண்டும் மறுக்கப்படுகின்றது” என அதில் கூறப்பட்டுள்ளது. இலங்கை சீன கடன் பொறிக்குள் சிக்கவில்லை என இலங்கை அதிகாரிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்திருந்தனர்.

சர்வதேச நிதியத்தின் (IMF) ஒத்துழைப்புக்களை பெறும் போது, இலங்கைக்கு தேவையற்ற நிபந்தனைகள் பிறப்பிக்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

“சர்வதேச நிதியத்திடம் செல்வதானது, மத்திய வங்கியை சுயாதீனப் படுத்துமாறு அவர்கள் கூறுகின்றனர். அரச ஊழியர்களின் சம்பளத்தை குறைக்க வேண்டும். அரச செலவீனங்களை குறைக்க வேண்டும் என அவர்கள் கூறுவார்கள்” என அமைச்சர் தெரிவித்தார்.

“தற்போதுள்ள நலன்புரி திட்டங்கள், சமுர்த்தியாக இருக்கலாம். வேறு திட்டங்களாக இருக்கலாம். அவற்றை நிறுத்துமாறு கூறக்கூடும். இவ்வாறான அனைத்து விடயங்களுக்கும் இந்த நாட்டு மக்கள் விருப்பமாக இருந்தால், சர்வதேச நிதியத்திடம் எம்மால் செல்ல முடியும். சர்வதேச நிதியத்திடம் செல்லுங்கள் என கூறுவது இலகுவான விடயம். அங்கு சென்றதன் பின்னர், சர்வதேச நிதியம் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றும் போதே தெரியும், தமக்கு தாமே குழி வெட்டிக் கொண்டோம் என்று” என அமைச்சர் மேலும் கூறினார்.

எனினும், அவ்வாறான நிபந்தனைகள் எதுவும் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இதன்போது பதிலளித்தார்.

“நிபந்தனைகள் எதுவும் கிடையாது. அரச ஒழுக்கம் தொடர்பிலான நிபந்தனைகள் மாத்திரமே அங்கு காணப்படுகின்றன. அரசாங்கம் அதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும்” என அவர் கூறினார்.

தேவையற்ற நிபந்தனைகள் விதிக்கப்படும் என அவர்கள் கூறுகின்றனர். நிபந்தனைகள் விதித்தால், மக்களுக்கு சிரமம் ஏற்படும் என கூறுகின்றார்கள். நிவாரணங்களை இல்லாது செய்ய வேண்டுமாம். நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ என்ன செய்தார்? உர மானியத்தை அவர் இல்லாது செய்தார் அல்லவா? சர்வதேச நிதியம் செய்யும் என கூறியதையே அவர் செய்தார் அல்லவா? நீங்கள் கூறுவதையே நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செய்தார்.” என ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

**இலங்கைக்கு வெளிநாட்டு கடன்**

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் வெளிநாட்டு கடன் தொடர்பிலான சாராம்சத்தின் பிரகாரம், 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் இலங்கையின் முழு கடன் நிலுவை தொகையாக 35.1 பில்லியன் டொலராக காணப்படுகின்றது.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 30ம் திகதி வரை கூ.981.0 மில்லியன் கடன் செலுத்தப்பட்டுள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



**தமிழ்ப்பணியிலும் கலை, இலக்கிய செயல்பாடுகளிலும் ஈடுபட்டவாறு, ஆன்மீகப் பாதையிலும் பயணித்திருக்கும் நாகேஸ்வரன், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் பரம்பரையில் அங்கு தர்மகர்த்தாவாக விளங்கியவர்.**

# ஆசானின் ஆளுமை பண்புகளை ஆவணமாக்கிய நாகேஸ்வரன்

முருகபூபதி

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் நம்மத்தியிலிருந்து யாராவது ஒரு ஆளுமை நிரந்தரமாக விடைபெற்றுக்கொண்டே இருக்கிறார்கள்.

கடந்த ஜனவரியில் மல்லிகை ஜீவா விடைபெற்றார். டிசெம்பரில் கனகசபாபதி நாகேஸ்வரனும் விடைபெற்றுவிட்டார். இதற்கிடையில் எழுத்தாளர் கே. எஸ். ஆனந்தனும் சென்றுவிட்டார்.

மரணம் இயற்கையானது. அதனால்தான் இயற்கை எய்தினார் என்கின்றோம். எமது தாயகத்தில் எவரேனும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் மறைந்தவுடன், தொலைவிலிருந்து அந்த மரணச்செய்தியை கேட்கும்போது, ஏனோ சற்று கலங்கிவிடுகின்றேன்.

இந்த ஆண்டும் அந்தக்கலக்கம் அடிக்கடி வந்தமைக்கு முக்கிய காரணம் அவர்களின் வயதுதான். என்னை விட வயதில் குறைந்த ஒருவர் விடைபெறும்போது, மரணபயமும் வந்து சூழ்ந்துவிடுகிறது.

சில நாட்களுக்கு முன்னர் நான் வதியும் மெல்பனில் ஒரு தமிழ் அன்பர், என்னிலும் வயதில் குறைந்தவர் வாகனவிபத்தில் மறைந்தார். அந்தத் துயரத்தை கடப்பதற்கிடையில் நண்பர் க. நாகேஸ்வரனின் மரணச்செய்தி வந்து சேர்ந்தது.

தாமதிக்காமல், அவரது பூர்வீக ஊரைச்சேர்ந்த நண்பர் பூபாலசிங்கம் புத்தக நிலைய அதிபர் ஸ்ரீதரசிங்கை தொடர்புகொண்டு விசாரித்தேன். சிறிது காலம் நாகேஸ்வரன் சுகவீன முற்றிருந்தார் என்ற மேலதிக செய்தியும் கிடைத்தது.

இந்த அஞ்சலிக்குறிப்புகளுக்கு 'ஆசானின் ஆளுமைப்பண்புகளை ஆவணமாக்கிய ஆசான் கனகசபாபதி நாகேஸ்வரன்' என்று தலைப்பிட்டமைக்கு, அவரது சிறந்த நூல் ஒன்று எனது மேசையிலிருப்பதுதான் காரணம். சில வருடங்களுக்கு முன்னர், நாகேஸ்வரன் எழுதிய அறிவொளி மாவை த. சண்முகசுந்தரம் ( தசம் ) - சிந்தனைகளும் எழுத்துப்பணிகளும் - என்ற நூலை ( 395 பக்கங்கள் கொண்டது ) தசம் அவர்களின் புதல்வி என்னிடம் சேர்ப்பித்திருந்தார்.

தசம் என்று பலராலும் அழைக்கப்பட்ட எழுத்தாளர் த. சண்முகசுந்தரம் அவர்கள், தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் அதிபராக பணியாற்றிய காலப்பகுதியில், பின்னாளில் கலை, இலக்கிய, ஊடகத் துறையில் பிரகாசித்த பலருக்கு ஆசா னாக விளங்கியவர்.

நான் அறிந்தமட்டில், எழுத்தாளர்கள் சோமகாந்தன், ஆ. சிவநேசச்செல்வன், கோகிலா மகேந்திரன், நாகேஸ்வரன் ஆகியோர் உடனடியாக நினைவுக்கு வருகிறார்கள்.

க. நாகேஸ்வரன், தனது ஆசான் பற்றி எழுதிய நூலின் அணிந்துரையில் இவ்வாறு ஒரு பந்தியை பதிவுசெய்துள்ளார்.

"மலையைக் காண்பதற்குத் தூரம் வேண்டும். சம்பவங்களை மதிப்பிடுவதற்குக் காலம் வேண்டும்" என்று எமக்கு உபதேசம் செய்யும் 'அறிவொளி 'தசம் 'அவர்களை நாம் நினைக்கும் போதெல்லாம், ஒரு விரிவான - விசாலமான - உண்மையான - நன்மையான - திடமான - நம்பிக்கை தரும் கோட்பாட்டை இரை மீட்கின்றோம் என்ற திருப்தி எமக்கு ஏற்பட்டதை இன்றும் மீள நினைக்கின்றோம்."

இந்த வரிகளை படிக்கும்போது, இம்மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் தனது 69 வயதில் மறைந்திருக்கும் நாகேஸ்வரன் பற்றிய நினைவுகளுக்கும் இது முற்றிலும் பொருந்துகின்றது.

எப்போதும் புன்னகை தவழும் முகத்திற்கு சொந்தக்காரரான இவரை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்துள்ளன.

இவர், யாழ். தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் 1966 முதல் 1974 வரையில் கற்றவர். இக்கல்லூரி பல கலை, இலக்கிய ஆளுமைகளின் உருவாக்கத்திற்கு காரணமாக விளங்கியது.

தமிழ்ப்பணியிலும் கலை, இலக்கிய செயல்பாடுகளிலும் ஈடுபட்டவாறு, ஆன்மீகப் பாதையிலும் பயணித்திருக்கும் நாகேஸ்வரன், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் பரம்பரையில் அங்கு தர்மகர்த்தாவாக விளங்கியவர்.

சப்ரகமுவா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் கலை, இலக்கிய சமய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டவராகவும், இசைப்பிரசங்கம் நிகழ்த்தும் சிறந்த பேச்சாளராகவும், விளங்கியவர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ச்சிறப்பு பட்டதாரி என்றும் அறியமுடிகிறது.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, இந்திரபாலா, கைலாசநாதக் குருக்கள், சி. க. சிற்றம்பலம், அ. சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், நா. சுப்பிரமணிய அய்யர், எஸ். சத்தியசீலன், வி. சிவசாமி, சித்திரலேகா மௌனகுரு, சபா. ஜெயராசா முதலானோரிடம் கற்றுத் தேர்ச்சியடைந்தவர். பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்று கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்.

சித்தாந்த பண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்து, தேவார பன்னிசையிலும் தேர்ச்சி பெற்றவர். இத்தனைக்கும் மத்தியில் இலங்கைத் தலைநகரில் நீண்டகாலமாக இயங்கிவரும் அகில இலங்கை இந்து மாமன்றம், தமிழ்ச்சங்கம், விவேகானந்த சபை, ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபை ஆகியனவற்றிலும் இணைந்திருந்தவர்.

இவரும் 1980 களில் 'ஈழநாடு' பத்திரிகையில் சிறிதுகாலம் துணை ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். சீனாவுக்கு புலமைப்பரிசில் பெற்றுச் சென்று வானொலி, தொலைக்காட்சி பயிற்சியும் பெற்றுத்திரும்பியவர்.

சாகித்திய விருது, கலாபூஷணம் விருது ஆகியனவற்றையும் பெற்றிருப்பவர். நாம் 2011 ஆம் ஆண்டு கொழும்பில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை நான்கு நாட்கள் நடத்திய போதுதான் இவருடன் அதிகநேரம் உரையாடக்கிடைத்தது.

அச்சமயம்தான் எனது மனைவி மாலதியின் ஆசானாகவும் இவர் விளங்கியிருந்ததை அறிய முடிந்தது.

நாகேஸ்வரனின் மரணச்செய்தி அறிந்ததும் நாமிருவரும் சற்று நேரம் ஆழ்ந்த துயரத்தில் உறைந்துவிட்டோம்.

உறவாடுவதற்கு உகந்த எளிமையான பண்புகளை கொண்டிருந்த அன்பர் பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு தொலை தூரத்திலிருந்து சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றோம்.

அன்னாரின் மறைவினால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கேற்கின்றோம்.

---

# இலங்கையை...

இவ்வாறு செலுத்தப்பட்ட கடனில் $520.6 மில்லியன், அடிப்படை கடனை மீள செலுத்துவதற்காகவும், எஞ்சிய $460.4 மில்லியன் டொலர் வட்டியை செலுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட, வெளிநாட்டு கடன் சாரம்சத்தை மேற்கோள்காட்டி, இலங்கையின் கடன் சாரம்சத்தை கொழும்பிலுள்ள சீன தூதரகம் வெளியிட்டுள்ளது. "வேறொரு வசனத்தில் கூறுவதென்றால், மேற்குலக நாடுகளின் "கடன் பொறியிலிருந்து" இலங்கையை சீனாவே காப்பாற்றியது" என அதில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இலங்கைக்கு பிரதான கடன் வழங்குநர்களின் விபரங்கள்:

01.வர்த்தக கடன் பெறுகின்றமை அல்லது சர்வதேச சாவரின் பத்திரங்கள் (ISB) 47%

02.ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) - 13%

03.சீனா - 10%

04.ஜப்பான் - 10%

05.உலக வங்கி - 9%

**ஐரோப்பாவிலிருந்து யூரோ திட்டம்**

ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளின் அபிவிருத்தி திட்டங்களுக்காக பாரியளவிலான நிதி உதவிகள் மற்றும் கடன் வசதிகளை சீனா வழங்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு, கோவிட் தடுப்பூசிகள் மற்றும் சுகாதார வசதிகளை சீன வழங்கியுள்ளது.

இந்த பின்னணியில், சீனாவின் திட்டத்திற்கு எதிர் திசையில், சர்வதேச அளவிலான முதலீட்டு திட்டத்தை முன்வைக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராகி வருகின்றது.

அதனூடாக, டிஜிட்டல், போக்குவரத்து, காலநிலை, மின்சக்தி தொடர்பிலான திட்டங்கள் குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆப்பிரிக்கா மற்றும் வேறு வளையங்களில், சீனாவின் அழுத்தங்களுக்கு எதிராக மேற்குல நாடுகளின் முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இது கருதப்படுகின்றது.

இந்த திட்டத்திற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் 300 பில்லியன் யூரோ முதலீடு செய்யப்படுகின்றது.

இதேவேளை, ஆசிய வளையத்தில் சீனாவின் அழுத்தங்களை தவிர்க்கும் வகையில், இந்தியாவினால் புதிய முதலீட்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்காக, இந்தியா பொருளாதார நிவாரண பொதியொன்றை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியுள்ளதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, திருகோணமலை எண்ணெய் களஞ்சியசாலை அபிவிருத்தி, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய உணவு பொருட்கள், எரிபொருள் இறக்குமதி மற்றும் இலங்கைக்கு நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியன இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நிவாரண பொதியில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்


கல்வி tv CHANNEL

**14.** தமிழ்க் கருத்தை எழுதுக.

என்ன லமய் : ..............................................................................

**15.** ஆயிரத்தினிடம் 9, பத்தினிடம் 5, பத்தாயிரத்தினிடம் 4, நூறினிடம் 0, ஒன்றினிடம் 1 ஆகவுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.


..............................................................................................................

**16.** 

இவ் இலக்கங்களைப் பயன்படுத்தி 40 000 இற்கும் 60 000 இற்கும் இடைப்பட்ட எண்கள் இரண்டை எழுதுக.


..................................., .........................................

**17.** அருகே தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{4}$ பங்கினை நிழற்றுக.
(பேனை அல்லது பென்சில் பயன்படுத்தவும்.)



**18.** ix + iv = ☐ வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய உரோமன் எண்ணை எழுதுக.

..............................................................................

**19.** 

(i) தரப்பட்ட உருவினுள்ளே செங்கோணங்கள் எத்தனை உண்டு?


..............................................................................

(ii) இவ்வுருவைச் சமச்சீராகப் பிரிக்கும் இரண்டு கோடுகளை உருவில் வரைந்து காட்டுக.

**20.** 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் நீரை நான்கு குவளைகளில் சமமாக ஊற்றும் போது ஒரு குவளையில் உள்ள நீரின் அளவை எழுதுக.

..............................................................................

**21.** வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

| வடிவம் | பெயர் | விளிம்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
|  | .................... | .................... | .................... | .................... |

**22.** பாடசாலை ஒன்றில் 30 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய ஆறு வகுப்பறைகளும், 35 பிள்ளைகள் வீதம் இருக்கக் கூடிய நான்கு வகுப்பறைகளும் இருந்தன. எனின் பத்து வகுப்பறைகளிலும் இருக்கக் கூடிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?


**23.** என்னிடமுள்ள பென்சிலின் நீளம் 13cm 5mm ஆகும். தம்பியிடம் இருந்த பென்சிலின் நீளம் எனது பென்சிலின் நீளத்திலும் 4cm 7mm குறைவானது.

**(i)** தம்பியிடமிருந்த பென்சிலின் நீளம் யாது? ....................cm ............................mm

**(ii)** என்னிடமும் தம்பியிடமும் இருந்த பென்சில்களின் மொத்த நீளம் யாது?

....................cm ............................mm

**24.** P, Q, R, S, T, U சில நகரங்கள் அமைந்துள்ள விதம் தரப்பட்டுள்ளது.




**(i)** Q நகரமானது S நகரத்திற்கு எத்திசையில் உள்ளது?

..............................................

**(ii)** நகரம் P ஆனது T யிற்கு .......................................... திசையிலும் .................... இற்கு வடமேற்குத் திசையிலும் காணப்படுகின்றது.


**25.** முற்பகல் 6.00 இற்கு நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட பேருந்து 3 மணித்தியாலம் 45 நிமிடங்களில் கண்டியை அடைந்தது. அங்கு 30 நிமிடங்கள் தாமதித்த பின் 2 மணித்தியாலம் 40 நிமிடங்களின் பின் கொழும்பை அடைந்தது. பேருந்து கொழும்பை அடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்திற்கேற்ப எழுதுக.

..............................................................................

**26.** 620 தோடம்பழங்களில் 80 ஐ மீதப்படுத்தி வைத்து ஏனையவற்றை ஆறு பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?

..............................................................................

## விடைகள்

| | |
|---|---|
| 14. | வாருங்கள் பிள்ளைகள் |
| 15. | நாற்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொன்று |
| 16. | 56709, 56907, 56079 ( 40000-60000 இற்கு இடைப்பட்ட எண் ) |
| 17. | 15 முக்கோணங்களுக்கு நிழற்ற வேண்டும். |
| 18. | XIII |
| 19. | (i) 8 (ii)  |
| 20. | 375 ml |
| 21. | கனவுரு, 12, 6, 8 |
| 22. | 320 பிள்ளைகள் |
| 23. | (i) 8 cm 8 mm<br>(ii) 22 cm 3 mm |
| 24. | (i) தென்மேற்கு<br>(ii) மேற்கு, U |
| 25. | 12 : 55 |
| 26. | 90 தோடம்பழங்கள் |

ஈழநாடு

# பூஸ்டரைப் பெறாவிட்டால் நாடு மீளவும் முடக்கப்படும்

## சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 17

**“மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை உரிய காலப்பகுதிக்குள் பெறாவிட்டால் நாட்டில் நாளாந்தச் செயல்பாடுகள் மீண்டும் முடங்கக்கூடும்.”**

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“நாட்டில் தற்போது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. ஆனால், நாம் எதிர்ப்பார்த்தளவு அதனைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை.

தற்போது வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு நாம் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்ததே காரணம்.

எனவே, இந்த நிலைமையைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்காமல் இருப்பதற்கும் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்கள், மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறமுடியும்” - என்றார். (இ)

## 250 கிலோகிராம் உரம் கொள்ளை

மட்டக்களப்பு, டிசெ. 17

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை விவசாய திணைக்கள காரியாலயத்தின் களஞ்சிய அறையில் இருந்த சுமார் 250 கிலோகிராம் நிறையுள்ள 5 உரப்பைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலரே இவ்வாறு களஞ்சியசாலையின் பூட்டு உடைத்து அங்கிருந்த உரப்பைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.


இந்நிலையில், இது குறித்த மேலதிக விசாரணைகளைக் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செல்லத் தடுப்பூசி அட்டை கட்டாயம்!

இரத்தினபுரி, டிசெ. 17

கொரோனா காரணமாக புனித யாத்திரைக் காலங்களில் சிவனொளிபாதமலைக்கு செல்லும் பக்தர்களுக்கான புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள் ளன.

அதன்படி, சிவனொலி பாதமலைக்குச் செல்லும் பக்தர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான தடுப்பூசி அட்டை அல்லது அதன் நகலை உடன் வைத்திருக்க வேண்டும்.



இதனிடையே சிவனொலி பாதமலை யாத்திரை காலத்தில் பக்தர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோதகம வெளியிட் டுள்ளார்.

மாவட்ட செயலாளரால் வெளியிடப்பட்ட விதிமுறைகளில் யாத்திரீகர்கள் தற்காலிக தங்குமிடங்களை ஏற்பாடு செய்யவோ அல்லது பராமரிக்கவோ கூடாதென்று தெரிவித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி வர்த்தக நிலையங்களை நிர்மாணிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் யாசகம் எடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், முகக் கவசம் மற்றும் சமூக இடைவெளி என்பனவும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான யாத்திரை டிசெம்பர் 18ஆம் திகதி (நாளை) தொடங்கி அடுத்த ஆண்டு மே 16 ஆம் திகதியுடன் நிறைவடையும். (இ)

# நெருக்கடியான நிலையில் சபை கூட்டப்பட வேண்டும்

## ஜனாதிபதியின் முடிவுக்கு எதிராக கிரியெல்ல கருத்து

கொழும்பு, டிசெ. 17

“இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டன் பாராளுமன்றம் மீது 14 தடவைகள் குண்டு வீசப்பட்டன. ஆனால், பாராளுமன்ற அமர்வு நிறுத்தப்படவில்லை. ஏனெனில் நெருக்கடியான சூழ்நிலையில் சபை கட்டாயம் கூட்டப்படவேண்டும். ஆனால், இலங்கையில் தற்போது வழமைக்கு மாறாக நடக்கின்றது.”

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, ஜனாதிபதியால் பாராளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர்



மேலும் தெரிவித்ததாவது:-

“சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு பெரும் நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளது. கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் பாராளுமன்றம் தொடர்ச்சியாகக் கூட வேண்டும்.

பாராளுமன்ற அமர்வு நாட்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், இங்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் இதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் அதனைப் பயன்படுத்தியமை தவறு.

பிரிட்டன் பாராளுமன்ற நடைமுறையே இங்கு அமுலில் உள்ளது. பிரிட்டன் பாராளுமன்றம் 800 வருடங்கள் பழமையானது. இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டன் பாராளுமன்றம் மீது 14 தடவைகள் குண்டு போடப்பட்டன. அப்போது அருகிலுள்ள இடத்துக்குச் செங்கோலைக் கொண்டு சென்று, சபை அமர்வை சபாநாயகர் நடத்தினார். பாராளுமன்றம் மூடப்படவில்லை. ஏனெனில் நெருக்கடியான சூழ்நிலையில் தீர்வைத் தேட கட்டாயம் கூட வேண்டும். இங்கு பிரச்னைகளுக்கு அரசிடம் தீர்வு இல்லை. அதே போல் தெரிவுக்குழுக்களின் நடவடிக்கையைத் தாமதப்படுத்த வேண்டும். இவற்றுக்காகவே பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது”

- என்றார். (இ)

## இ.தொ.கா. தவிசாளருக்கு எதிராகப் போராட்டம்

அக்கரப்பத்தனை, டிசெ. 17

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் தவிசாளர் மக்களின் வரிப்பணத்தை முறைகேடாகப் பயன்படுத்துகின்றார் எனவும், பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வியாபார நோக்கில் கடைகளை அமைக்கின்றார் எனவும் குற்றஞ்சாட்டி அதற்கு எதிராக தொழிலாளர் தேசிய சங்கத்தின் அக்கரப்பத்தனை பிரதேச சபை உறுப்பினர்களும் பிரதேச மக்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துள்ள பிரதேச சபையின் தவிசாளர் கதிர்ச்செல்வன், மக்களுக்கான பஸ் தரிப்பிடமே அமைக்கப்படுகின்றது எனவும், எஞ்சிய இடத்திலேயே சட்டபூர்வமான அனுமதியுடன் மக்கள் நலன் கருதி கடைகள் நிர்மாணிக்கப்படுகின்றன



எனவும் அவர் கூறினார்.

அக்கரப்பத்தனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்ற வேளையிலேயே, லிந்துலை நாகசேனையில் உள்ள சபைக்கு முன்னாள் பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும், சபை தவிசாளரின் செயலைக் கண்டித்தும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் உபதலைவரும் அக்கரப்பத்தனை பிரதேச சபையின் உறுப்பினர் வே.சிவானந்தன் மற்றும் உறுப்பினர் எஸ்.சுதாகர் ஆகிய இருவருமே இவ்வாறு வெளிநடப்புச் செய்தனர்.

“அக்கரப்பத்தனை, மன்றாசி நகரிலுள்ள புதிய பாலத்துக்கு அருகில் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்காகவே அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், பஸ் தரிப்பிடம் அமைக்காமல், தனக்கும் தனது சகாக்களுக்கும் தவிசாளர் கடைகளை அமைத்து வருகின்றார். சட்ட விரோதமாகவே இதற்கான நடவடிக்கை இடம்பெறுகின்றது. தோட்ட அனுமதியின்றி காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது” என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

கட்டாயம் பஸ் தரப்பிடம் அமைக்கப்பட வேண்டும், மக்களின் வரிப்பணத்தை தவிசாளர் முறையாக பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர். (இ)


## கைபேசியில் உரையாடியவர் ரயில் மோதி பரிதாப மரணம்

கொழும்பு, டிசெ. 17

பொடிமெனிக்கே ரயில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளையில் இருந்து கொழும்பு - கோட்டை நோக்கிப் பயணித்த பொடி மெனிகே ரயிலில் தலவாக்கலை, சென்.கிளயார் மற்றும் சென். அன்ட்ரூஸ் ஆகிய இடங்களுக்கிடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கொட்டகலை சென். அன்ட்ரூஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஆர். மோகனசுந்தரம் (வயது- 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



குறித்த நபர் தனது கையடக்கத் தொலைபேசியில் பேசிக் கொண்டு, ரயில் பாதையில் பயணித்தபோது விபத்துக்குள்ளானார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த உயிரிழந்த இளைஞரின் சடலம் கொட்டகலை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தலவாக்கலை மற்றும் திம்புளை - பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அவுஸ்திரேலியாவில் காற்றில் தூக்கி வீசப்பட்ட குழந்தைகள்!

## ஐந்து பேர் பலி! பலர் படுகாயம்!!

கான்பரா, டிசெ. 17

அவுஸ்திரேலியாவில் ஜம்பிங் காஸ்டில் என்னும் காற்று அடைக்கப்பட்ட விளையாட்டுத் தளம், காற்றில் பறந்ததில் இதில் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து குழந்தைகள் உயிரிழந்தனர். பலர் பலத்த காயமடைந்தனர்.

தஸ்மனியா மாநிலத்தின் வடமேற்கில் உள்ள டெவோன்போர்ட்டில் உள்ள ஹில்கிரெஸ்ட் ஆரம்பப் பள்ளியில் ஆண்டு இறுதிக் கொண்டாட்டத்தின்போது இந்த விபத்து நடந்தது.




காயமடைந்தவர்கள் சம்பவ இடத்திலேயே சிகிச்சை அளித்து ஹெலிகொப்டர்களில் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். காற்று ஊதப்பட்ட மிதவையில் எத்தனை குழந்தைகள் இருந்தனர் என்பது தெரியவில்லை.

நேற்று நான்காம் தவணையின் இறுதிநாளாகும். உள்ளூர் நேரப்படி முற்பகல் 10 மணியளவில் விபத்து நேர்ந்தது.

குழந்தைகள் சுமார் 10 மீற்றர் உயரத்திலிருந்து கீழே விழுந்துள்ளனர்.

“திடீரென வலுவான காற்று வீசியதால்” மிதவை மேலே பறந்து இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.



# சூரியனை தொட்டது நாஸாவின் விண்கலம்!

வாஷிங்டன், டிசெ. 17

அமெரிக்காவின் விண்கலமான பார்க்கர் சூரியனின் வெப்பமண்டலத்துக்குள் மூன்றுமுறை நுழைந்து வெளியேறியுள்ளது.

நாஸா சூரியனை ஆய்வு செய்வதற்காக 2018ஆம் ஆண்டு பார்க்கர் விண்கலத்தை அனுப்பியது. இந்த விண்கலம் ஏப்ரலில் சூரியனுக்கு நெருக்கமாக வந்தது.

இப்போது, கொரோனோ எனப்படும் சூரியனின் வெளிப்புற வெப்ப வாயு மண்டலத்திற்குள் பார்க்கர் நுழைந்து வெளியேறியுள்ளது. பார்க்கர் விண்கலம் தற்போது இந்த விண்கலம் சூரியனிலிருந்து 1.30 கோடி கி. மீ. தூரத்தில் இது உள்ளது.

விநாடிக்கு 100 கி. மீ., வேகத்தில் சுற்றும் பார்க்கர், மூன்று முறை சூரியனின் வெப்ப வாயு மண்டலத்திற்குள் நுழைந்து வெளிவந்துள்ளது. இது ஒருவகையில் சூரியனை தொட்டது போன்றது தான். முதன் முறையாக இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று மிசிமிசிப்பி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி ஜஸ்ரின் காஸ்பர் கூறியுள்ளார். (ஐ)



# மலேசியாவில் படகு விபத்து!

### 16 பேர் பலி; 27 பேரை காணவில்லை!!

கோலாலம்பூர், டிசெ. 17

மலேசியாவின் தெற்கு பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் 16பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 27 பேரை காணவில்லை.

அண்டை நாடான மலேசியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட சுமார் 60 இந்தோனேசியர்களை ஏற்றிச் சென்ற கப்பல், தெற்கு மாநிலமான ஜோகூரில் கடந்த புதன்கிழமை புயல் கால நிலையால் கவிழ்ந்தது.

உயிரிழந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திடீரென ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போனவர்களை தேடும் பணியில் மீட்புப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கத்தை கடக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஏழு ஆண்களும் நான்கு பெண்களும் அடங்குவர். மேலும் 20 ஆண்களையும் இரண்டு பெண்களையும் மீட்புப் படையினர் உயிருடன் மீட்டுள்ளனர்.

காணாமல்போனவர்கள் உயிருடன் இருப்பது சாத்தியமில்லை என தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

# டெல்டாவை விடவும் 70 மடங்கு வேகமாக பரவும் ஓமைக்ரோன்!

### ஹொங்கொங் பல்கலை ஆய்வில் தகவல்

ஹொங்கொங், டிசெ. 17

ஓமைக்ரோன் புதிய கொரோனா திரிபு அசல் கொரோனா வைரஸை விட 70 மடங்கு அதிவேகமாகப் பரவுவதாகக் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் ஆராய்ச்சியாளர்கள் தலைமையிலான ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் முடிவுகள் ஓமைக்ரோன் திரிபு மனிதர்களை எவ்வாறு பாதிக்கிறது? என்பது குறித்த முதல் தகவலை வழங்குகிறது.

ஓமைக்ரோன் திரிபு அசல் கொரோனா மற்றும் டெல்டாவை விட மனிதர்களின் சுவாசக் குழாயில் 70 மடங்கு வேகமாக பெருகுகிறது என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதுவே ஓமைக்ரோன் மிக வேகமாகப் பரவக் காரணம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

எனினும் ஆறுதல் அளிக்கும் விடயமாக அசல் கொரோனா திரிபை விட ஓமைக்ரோன் நுரையீரலைத் தாக்கும் திறன் குறைவாகவே உள்ளது. இதுவே ஓமைக்ரோனால் நோய் பாதிப்பு மற்றும் மரணங்கள் குறைவாக பதிவாவதற்கான காரணமாக இருக்கலாம் எனவும் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

ஹொங்கொங் மருத்துவ பீடத்தின் நோயெதிர்ப்பு மற்றும் தொற்று மைய இணை பேராசிரியர் டாக்டர் மைக்கல் சான் சி-வாய், ஹொங்கொங் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நோயியல் துறை பேராசிரியர் ஹொங்கொங் ஜோன் நிக்கோல்ஸ் இந்த ஆய்வின் முன்னோடிகளாக இருந்தனர்.

2020 முதன்முதலில் பரவிய அசல் கொரோனா வைரஸ், டெல்டா மற்றும் தற்போது பரவிவரும் ஓமைக்ரோன் திரிபுகள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்து ஆய்வாளர்கள் தனித்தனியாக ஆராய்ந்தனர்.

அசல் வைரஸ் மற்றும் டெல்டா திரிபை விட ஓமைக்ரோன் உருதிரிபு மனித சுவாசக் குழாயில் 70 மடங்கு வேகமாகப் பெருகுகிறது என இதன்போது அவார்கள் கண்டறிந்தனர். அதேநேரம் இது ஏனைய திரிபுகளை விட நுரையீரலில் குறைவான தாக்கத்தையே ஏற்படுத்துகிறது. இதனால்தான் ஓமைக்ரோன் தொற்று நோயாளர்கள் குறைந்த அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றனர் என நம்பப்படுகிறது எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# பீஜிங்கில் தூதரகத்தை மூடிய லித்துவேனியா!

பீஜிங், டிசெ. 17

பீஜிங்கில் உள்ள தங்கள் நாட்டின் இறுதி அதிகாரியும் வெளியேற்றப்பட்டதையடுத்து, லித்துவேனியாவின் தூதரகம் மூடப்பட்டது.

இது தொடர்பாக லித்துவேனிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘சீனாவில் தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தூதரகச் செயல்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இதேபோல், லித்துவேனியாவில் சீன தூதர்களின் அங்கீகாரத்தை புதுப்பிப்பது தொடர்பான சீனாவின் முடிவு நிலுவையில் உள்ளது.

சீனாவுடனான பேச்சை தொடரவும், பரஸ்பர நன்மை பயக்கும் உடன்பாடு எட்டப்பட்டவுடன் தூதரகத்தின் செயல்பாடுகளை முழுமையாக மீட்டெடுக்கவும் லித்துவேனியா தயாராக உள்ளது’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானுக்கு மறைமுகமாக தனி நாடு அங்கீகாரம் அளிக்கும் வகையில், தாய்வானுக்கான பிரதிநிதித்துவ அலுவலகத்தை தங்கள் நாட்டில் திறக்க லித்துவேனியா அனுமதித்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டுக்கான தூதரக அந்தஸ்தை சீனா குறைத்தது. லித்துவேனியாவுக்கான தங்கள் நாட்டுத் தூதரை திரும்ப அழைத்ததுடன், அந்த நாட்டின் தூதரையும் சீனா வெளியேற்றியது. இதன் காரணமாக இருநாட்டு உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தாய்வானை தனது நாட்டின் பிராந்தியம் என கருதும் சீனா, தாய்வானை தம்முடன் இணைக்கப் போவதாக கூறிவருகின்றது. ஆனால், தாங்கள் இறையாண்மை கொண்ட அரசாங்கம் என உறுதிபட தாய்வான் கூறியுள்ளது.

# கொரோனா தொற்று பிரிட்டனில் தீவிரம்!

லண்டன், டிசெ. 17

பிரட்டனில் ஓமைக்ரான் வைரஸ் அதிவேகமாகப் பரவி வருகிறது. இதுவரையில்லாத வகையில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 78 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரிட்டன் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் 70 சதவீதம் பேர் தடுப்பூசியை முழுமையாக செலுத்திவிட்டனர், பூஸ்டர் டோஸூம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் அங்கு 3ஆவது அலை வாட்டி எடுத்து வருகிறது.

அடுத்த சில நாட்களில் பாதிப்பு இன்னும் கடுமையாக அதிகரிக்கும் என்று பிரிட்டன் சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளதால், மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இதற்கு முன் கடந்த ஜனவரியில் அதிகபட்சமாக தினசரி 10ஆயிரத்துக்கும் மேல்தான் பாதிக்கப்பட்ட நிலையில் ஒரேநாளில் 78ஆயிரத்து 610 பேர் பாதிக்கப்பட்டது அதிகபட்சமாகும். பிரிட்டனில் 6.7 கோடி மக்கள் வசிக்கும் நிலையில் இது வரை 1.10 கோடி பேர் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு



# ஆஷஷ் இரண்டாவது டெஸ்ட்; அவுஸ்திரேலியா வலுநிலை!

அடிலெய்ட், டிசெ. 17

டேவிட் வோர்ணர், லபுசாக்னே ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் இரண்டாவது போட்டியின் முதல்நாள் ஆட்டம் முடிவில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 221 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையிலுள்ளது அவுஸ்திரேலிய அணி.

இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஷ் டெஸ்ட் தொடர் தற்போது அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று தொடங்கியது. அணித் தலைவர் பட் கம்மின்ஸ் விலகிய நிலையில் இந்தப் போட்டிக்கு ஸ்ரீவன் ஸ்மித் தலைமையேற்றார்.

இரவு - பகல் போட்டியாக அடிலெய்ட்டில் நடக்கும் இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மார்கஸ் ஹரிஸ், டேவிட்



வோர்ணர் தொடக்கம் கொடுத்தனர். எனினும், இந்த இணை நிலைக்கவில்லை. ஹரிஸ் 3 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இதையடுத்து வந்த மார்னஸ் லபுசாக்னே வோர்ணருடன் இணைந்து சிறப்பாக ஆடினார். 108 பந்துகளை சந்தித்த வோர்ணர் 8 பௌண்ட்ரிகளுடன் அரைச் சதம் கடந்தார். அவரைத் தொடர்ந்து 156 பந்துகளில் அரைச்சதம் தொட்டார் லபுசாக்னே.

தொடர்ந்த ஆட்டத்தில் டேவிட் வோர்ணர் 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரோட்டின் பந்தில் ஸ்ரோக்ஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர், 167 பந்துகளில் 11 பௌண்ட்ரிகளுடன் 95 ஓட்டங்களை சேர்த்திருந்தார். இதைத் தொடர்ந்து லபுசாக்னேயுடன் இணைந்தார் அணித் தலைவர் ஸ்ரீவன் ஸ்மித். இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது அவுஸ்திரேலியா 2 விக்கெட்களை மட்டும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லபுசாக்னே 95 ஓட்டங்களுடனும், ஸ்மித் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் பிரோட், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# மேற்கிந்திய தீவுகள் அணியின் மேலும் 3 வீரர்களுக்கு தொற்று

கராச்சி, டிசெ. 17

மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்று விளையாடி வருகின்றது. இந்த நிலையில், அந்த அணியில் மேலும் 3 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

ஷெல்டன் காட்ரெல், ராஸ்டன் சேஸ், கைல் மேயர்ஸ் ஆகிய 3 வீரர்கள் ஏற்கெனவே கொரோனா பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 3 வீரர்கள் உள்பட 5 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஷாய் ஹோப், அகேல் ஹுசைன், ஜஸ்ரின் கிரீவ்ஸ் ஆகிய மூன்று மே. இ. தீவுகள் வீரர்களும் தொற்றால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

இந்நிலையில், இரு போட்டிகள் முடிவடைந்த நிலையில் மிகுதி போட்டிகளை விளையாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் அணிகளின் கிரிக்கெட் சபைகள் பேச்சு நடத்துகின்றன. விரைவில் இது குறித்து முடிவு எட்டப்படும் என்று நேற்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



# பட் கம்மின்ஸ் விலகல்!

அடிலெய்ட், டிசெ. 17

நேற்று அடிலெய்ட்டில் ஆரம்பமான ஆஷஷ் டெஸ்டின் இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் களமிறங்கவில்லை.

நேற்று முன்தினம் இரவு உணவு விடுதி ஒன்றுக்கு பட் கம்மின்ஸ் சென்றுள்ளார். அவருக்கு அருகே அமர்ந்து உணவருந்தியவர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து முன்னெச்சரிக்கையாக அவர் அணியிலிருந்து விலகியதுடன், போட்டியிலும் களமிறங்கவில்லை.

மிற்சல் ஸ்ரார்க், நதன் லியன் ஆகியோரும் இந்த உணவு விடுதிக்கு சென்றிருந்தனர். ஆனால், அவர்கள் அதே மேசையில் அமராததால் நேற்றைய போட்டியில் களமிறங்கினர்.

7 நாள்கள் தனிமைப்படுத்தப்படும் பட் கம்மின்ஸ் மூன்றாவது டெஸ்ட் போட்டியான பொக்ஸிங் டே போட்டியில் களமிறங்குவார்.

இந்நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு ஸ்ரீபன் ஸ்மித் தலைவராகவும், ட்ராவிஸ் ஹெட் உப தலைவராகவும் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

*2000 மீற்றர் ஓட்டப் போட்டி:*

# உலக சாதனை படைத்தார் பிரான்ஸின் நியோன்ஷபா!

செக்ரேப், டிசெ. 17

புருண்டி நாட்டு மெய்வல்லுநர் வீராங்கனையான பிரான்ஸின் நியோன்ஷபா பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டிக்கான உலக சாதனையை நேற்று முன்தினம் படைத்தார்.

குரோஷியாவின் செக்ரெப் நகரில் நடைபெற்ற ஹென்சகோவிக் ஞாபகார்த்த மெய்வல்லுநர் போட்டியின் பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டியை 5 நிமிடங்கள் 21:56 செக்கன்கள் என்ற நேரப்பெறுதியில் ஓடி முடித்து உலகச் சாதனையை தன்வசப்படுத்தினார் நியோன்ஷபா.

இதற்கு முன்னர் 2017இல் எதியோப்பிய வீராங்கனையான ஜென்சேப் டிபாபா 5 நிமிடங்கள் 23:75 செக்கன்களில் ஓடி முடித்திருந்தமையே உலக சாதனையாக இருந்தது. தற்போது இந்த சாதனையை புருண்டி நாட்டின் பிரான்ஸின் நியோன்ஷபா முறியடித்தார்.

இவர், 2016 றியோ ஒலிம்பிக் மற்றும் 2017 லண்டனில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டி ஆகியவற்றின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)








# ரங்கன ஹேரத்துக்கு கொரோனா தொற்று

டாக்கா, டிசெ. 17

இலங்கை அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழல்பந்து வீச்சு பயிற்றுநருமான ரங்கன ஹேரத் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார்.

பங்களாதேஷ் அணியுடன் இணைந்து நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கோவிட்-19 தொற்று தொடர்பான இலகுவான அறிகுறிகளை ஹேரத் வெளிப்படுத்தினாரெனவும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அணியின் ஏனைய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் பங்களாதேஷ் அணியின் ஏனைய வீரர்களும், பயிற்சி மற்றும் பணியாளர்களும் இதுவரை கோவிட் தொற்று தொடர்பான எந்தவோர் அறிகுறிகளையும் வெளிப்படுத்தவில்லை.

பங்களாதேஷ் அணியில் உள்ள அனைவருக்கும் மேற்கொள்ளப்பட்ட முதல் இரண்டு கோவிட் சோதனைகளில் எதிர்மறையான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

நியூசிலாந்துக்கான சுற்றுப்பயணத்தில் பங்களாதேஷ் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஜனவரி 1 ஆம் திகதி மௌண்ட் மாங்கனுய் மைதானத்திலும், இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிறிஸ்ட்சர்ச்சில் ஜனவரி 9 ஆம் திகதியும் தொடங்கும்.

# சஜித்தால் ஆட்சியை கைப்பற்ற முடியாது!

## இப்படிச் சொல்கின்றது ஆளுங்கட்சி

கொழும்பு, டிசெ. 17

"சஜித் பிரேமதாஸவால் தற்காலிகமாக அரச எதிர்ப்பு அலையை உருவாக்க முடியும். ஆனால், அவரால் ஆட்சிக்கு வரமுடியாது. அதற்கான வாய்ப்பையும் நாம் வழங்கமாட்டோம்."

- இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நல்லாட்சியின்போது சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்தார். ஆனால், அவர்களால் பொருளாதாரத்தை மேம்படுத்த



முடியாமல் போனது. அனைத்து வழிகளிலும் நாட்டைக் குழப்பினர். இவ்வாறு செய்தவர்கள் இன்று இந்த அரசை விமர்சித்து, ஆட்சியைக் கோருவது வேடிக்கையானது.

கொரோனாப் பெருந்தொற்றால் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இதனைப் பயன்படுத்தி அரச எதிர்ப்பு அலையை உருவாக்கலாம். இது நிரந்தரமல்ல. நாம் மக்களுக்கு உரிய சேவைகளை வழங்கி முன்னேறுவோம்" - என்றார். (இ)

# 2022இல் ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி

## ராஜித எம்.பி. ஆரூடம்



கொழும்பு, டிசெ. 17

**"2022ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்குக் கடும் நெருக்கடி ஏற்படும்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் மார்ச்சில் ஆரம்பமாகின்றது. இலங்கை தொடர்பில் இம்முறை கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றே எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சர்வதேசத்துடன் நல்லுறவைப் பேணவில்லை. மனித உரிமைகளை மீறும் 45 நாடுகளில் இலங்கையும் இடம் பெற்றுள்ளது.

2022ஆம் ஆண்டு என்பது தீர்க்கமான வருடமாக அமையும். பல மாற்றங்கள் இடம் பெறும். ஆட்சி மாற்றம்கூட ஏற்படும்" - என்றார். (இ)

# மரண அறிவித்தல்

## திருமதி சரவணமுத்து பாக்கியலட்சுமி



வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரம் செல்வநாயகம் வீதியைப் பிறப்பிடமாகவும், இந்தியா சென்னை மடிப்பாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாக்கியலட்சுமி அவர்கள் 14.12.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நாகமணி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும், கமலேஸ்வரி (இந்தியா), விவேகானந்தன்(லண்டன்), விபுலானந்தன் (லண்டன்), யோகநாதன்(ஜேர்மனி), காலஞ்சென்ற விமலானந்தன்(அப்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற பாலச்சந்திரன், புனிதரேகா, அமிர்தகௌரி, ஜெகதீஸ்வரி, மாலினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசன்னா, பிரவீனா-தினேஷ், பிரியதர்சினி - சுஜிதன், வினோத்- ஷாலினி, விஜித்-சுஜிதா, விஜய், விதுரா, வித்யா, வினோஜா- ரவிசங்கர், சரண்யா-நந்தன், ரக்ஷனா, மயூரி- லக்தீபன், கஸ்தூரி-குமரன், கஜானன், விதுஷா- நிசாந்தன், வினுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தியா, கவின், ஆரத்யா, விர்ஷன், அக்ஷயா, ஆரியன், ஆதிஷயன், திசானி ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், சீதாலட்சுமி, நடேஸ் மற்றும் இராசயோகம், மனோரஞ்சிதம், பரமேஸ்வரி, கதிர்காமநாதன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், காலஞ்சென்ற லெட்சுமி, பொன்னம்மா, இரத்தினபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்**
**12 - 05 - 1922**



**மறைவு**
**14 - 12 - 2021**

தொடர்புகளுக்கு:
**கமலேஸ்வரி (மகள்)** : +919677149366, +918939506595
**விவேகானந்தன் (மகன்)** : +447984292968
**விபுலானந்தன் (மகன்)** : +447808271460
**யோகநாதன் (யோகன் - மகன்)** : +491632317927

தகவல்:
**குடும்பத்தினர்.**

### இராஜாங்க...

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தலைமையில் குழு, நேற்று அமெரிக்க தூதுவரை சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பின்போதே அமெரிக்கத் தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார்,

தற்போது நடைபெறும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு, தேசிய அரங்கில் மலையக தமிழ் மக்களின் எழுச்சி, இலங்கை தேசிய இனப் பிரச்னையில் அமெரிக்காவின் பங்கு, பொறுப்புக்கூறல், எதிர்வரும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டங்கள் ஆகியவை பற்றி இந்தச் சந்திப்பில் உரையாடப்பட்டது.

புதிய வருடத்தில் அமெரிக்காவில் இருந்து அரசாங்க பிரமுகர்கள், அதிகாரிகள் இலங்கை வர உள்ளனர் எனவும், அவர்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட இலங்கையின் அனைத்துத் தரப்பினரையும் சந்திக்க ஆவலாக உள்ளனர் என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

அதேபோல் அமெரிக்காவுக்கு வந்து இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்குமாறும் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பிக்கு அமெரிக்கத் தூதுவர் அழைப்பு விடுத்தார்.

தற்போதைய தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் கூட்டுச் செயற்பாட்டின் பின்னர், தேசிய,சர்வதேச அரங்குகளில் நாம் முன்வைக்க உள்ள, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பொதுக் கோரிக்கை யோசனைகள் அடங்கிய ஆவணத்துடன் நாம் சர்வதேச சமூகத்தை காத்திரமாக எதிர்கொள்வோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் பதிலளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அமெரிக்கத் தரப்பில் பதில் தூதுவர் மார்டின் கெலி, பதில் துணைத் தூதுவர் சுசன் வோல்க், அரசியல் அதிகாரி ஜெப்ரி சனின் ஆகியோரும், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன், நிதிச் செயலாளர் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், பொதுச் செயலாளர் சந்திரா சாப்டர், இணைத் தவிசாளர் பேராசிரியர் விஜயசந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

### மேலும் மூவருக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் வெளிநாட்டவர். அவர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். மற்றவர் இலங்கையர். மூன்றாவது நபர் அவருடன் தொடர்பு பேணியவர். இவர்களைப் பற்றி இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இவர்கள் தொடர்பான தகவல்களை விசாரித்து வருகிறோம். நாட்டில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நோயாளி தனி நோயாளியாக இருந்தார். ஆனால், இப்போது 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முதலாவதாக அடையாளம் காணப்பட்ட ஒமைக்ரோன் நோயாளருக்கு மேலதிகமாக மூவர் அடையாங்காணப்பட்டுள்ளனர். விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளினூடாகவே இவர்களில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எந்தெந்த பிரதேசங்களைச் சேர்ந்த வர்களுக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பது இதுவரையில் தெளிவாக தெரியவில்லை. சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று வெளிநாட்டுக்குச் சென்றவருடன் தொடர்பை பேணியவர்களை அடையாளம் காணும் செயற்பாடுகளை தொற்று நோய் விஞ்ஞான பிரிவு முன்னெடுத்து வருகின்றது.

தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக அறிவிக்கப்படும்-என்றார். (அ)

### நீண்ட காலத்துக்குப்...

டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்தவரே மலேரியா தொற்றுக்கு ஆளாகியிருக்கிறார். கடுமையான காய்ச்சல் மற்றும் மலேரியா அறிகுறிகளுடன் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் குறித்த நபர் சேர்க்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அவருக்கு மலேரியா தொற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. தொற்றுக்குள்ளான நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ளபோதிலும், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களால் மலேரியா பரவல் அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும், மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் மலேரியா முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய மலேரியாத் தடுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் அ. ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, அடுத்த மாதம் ஐயப்ப விரத பூர்த்திக்காக இந்தியாவுக்குச் செல்ல இருக்கும் பக்தர்கள் மலேரியா தடுப்புக்கான முன்னாயத்த சிகிச்சையைப் பெற்றுக் கொண்ட பின்னர் பயணத்தில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### கிளிநொச்சியில்...

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வு கூடங்களில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனைகளிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 7 பேருக்கும், யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, கிளிநொச்சி - உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனை ஊடாக பெறப்பட்ட மூவரின் மாதிரிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் உருத்திரபுரத்தில் இயங்கும் பராமரிப்பு இல்லத்தை சேர்ந்த 14 வயது மாணவிகளாவர். இவர்கள் மூவருக்கும் கொரோனா தொற்று அறிகுறி தென்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் மூவரும் தனிமைப்படுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

தவிர, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர், முல்லைத் தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

### ஒவ்வொருமணி...

வருகின்றன. இந்த வருடத்தில் கடந்த 333 நாட்களில் 10 ஆயிரத்து 713 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த முறைப்பாடுகளில் 5 வயதுக் குட்பட்ட சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்ததாக 1,632 வழக்குகளும், 6 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளை துஷ்பிரயோகம் செய்ததாக 2,626 வழக்குகளும் இருக்கின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "சிறுவர்கள் தொடர்பில் செய்தி வெளியிடுவதில் ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற செயலமர்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். (ஐ)

# 15 ஆண்டு சிறையின் பின்னர் தமிழ் அரசியல் கைதி விடுதலை

கொழும்பு, டிசெ. 17

கடந்த 15 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரை நிரபராதி எனக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

மானிப்பாய் வீதி , தாவடியை சேர்ந்த தேவராசா சிவபாலன் (வயது 45) என்பவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆயுதங்களை கொழும்புக்கு கடத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில், வத்தளை பகுதியில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு வருட கால விசாரணைகளின் பின்னர், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கொழும்பு நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 15 ஆண்டு காலமாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி அவருக்கு எதிரான வழக்கில் அவரை நிரபராதி என கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

இதேவேளை அவரின் மகளுக்கு ஒரு வயதும் நிரம்பாத நிலையில், அவர் கைது செய்யப்பட்டு , தற்போது அவர் விடுவிக்கப்பட்டதும் , தனது மகளை 15 வருடங்களின் பின் கண்டு நெகிழ்ச்சியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## பதில் நிதியமைச்சராக ஜீ. எல். பீரிஸ் நியமனம்!

கொழும்பு, டிசெ. 17

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ .எல். பீரிஸ் பதில் நிதியமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் டுபாய்க்கு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டமையைத் தொடர்ந்து பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் பதில் நிதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி இந்தியாவிற்கான இரு நாள் அரசமுறை உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

2022ஆம் ஆண்டு வரவு -செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து அவர் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு டுபாய் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பெப்ரவரி 7இல் உயர்தர பரீட்சை!

கொழும்பு, டிசெ. 17

2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் நேர அட்டவணை வெளியாகியுள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 07ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 04 ஆம் திகதி வரை உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### வடக்கில் சீனா...

சீனத் தூதுவர் கீ ஷங் ஹொங்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சீனா இலங்கையில் திட்டங்களை முன்னெடுப்பது இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என தமிழ் அரசியல்வாதிகள் வெளியிடும் கருத்து குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கு தொடர்ந்து பதிலளித்த தூதுவர்,

சீனாவால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறப்படும் கருத்துக்களில் உண்மையில்லை. நாங்கள் அயலவர்கள். ஒரே எல்லைக்கோட்டில் உள்ளவர்கள்.

இது தமிழ் அரசியல்வாதிகள் இந்தியாவிடம் ஏதோ ஒரு விடயத்தை எதிர்பார்த்து அதனை பெறுவதற்காக சீனாவைக் காட்டி அச்சுறுத்துகிறார்கள்.

தீவகத்தில் சீனா செயற்படுத்தவுள்ள மின் திட்டங்கள் காற்றாலை, சூரிய ஒளி ஆகிய இரண்டும் சேர்ந்த மின் திட்டங்களாகும். அது கைவிடப்படவேயில்லை.

வெளிநாட்டு நேரடி முதலீடாக சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டைச் செய்கின்றன. தீவக மக்களுக்கான மின்விநியோகத்துக்காகவே இந்த திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

எதாவது ஒரு காரணத்தைக் காட்டி இலங்கை அரசு இந்த திட்டங்களை நிறுத்தினால் அது எதிர்காலத்தில் வேறு வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு பெரும் பின்னடைவாகவே அமையும்.

இந்த மின் திட்டங்கள் இலங்கை அரசுக்கு ஒரு பரீட்சையைப் போன்றவை. இவற்றிலேயே எதிர்கால வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தங்கியுள்ளன-என்றார். (அ)

### மன்னாரில் சீனத்...

மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கும் இந்த வாழ்வாதார உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்துக்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர்களை சந்தித்தார்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் வலைத் தொகுதிகளையும் அவர் வழங்கினார்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கே.திலீபன் கலந்து கொண்டார்.

### காணாமல்...

அடுத்த வருடத்துக்கு தவணையிடப்பட்டு உள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

இதுதொடர்பான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தால், நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

இந்நிலையில், மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே. எஸ். ரட்ணவேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இறுதிப் போரில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு இன்று (நேற்று) வழங்கப்படவிருந்தது. இந்த வழக்கு தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று, அந்த நீதிமன்றம் ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கைமீதான வவுனியா மேல் நீதிமன்றின் தீர்ப்பு இன்று (நேற்று) வழங்கப்படுவதாக இருந்தது.

எனினும், அந்தத் தீர்ப்பு இன்னும் தயாரித்து முடிக்கப்படவில்லை என்று வவுனியா மேல் நீதிமன்றம் தமக்கு அறிவித்தது என்றும், அடுத்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# எதிரணியினர் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்காதீர்

## யாழ். மாநகர சபை பட்ஜெட் வாக்கெடுப்பு தொடர்பில் சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 17

**“எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியை எதிர்ப்பதுதான் பணி என்று நினைக்கக்கூடாது. மக்கள் நலன்சார்ந்து சிந்தித்தும் செயல்படவேண்டும். அதேபோன்று எதிரணியையும் அரவணைத்துச் செல்லும் வகையில், அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்காதவாறு யாழ்ப்பாணம் மாநகர சபை பட்ஜெட்டை மேயர் வி.மணிவண்ணன் முன்வைத்திருக்கவேண்டும்.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மணிவண்ணனால் முன்வைக்கப்படும் பட்ஜெட் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டிருக்குமாக இருந்தால், மக்களின் கோபங்கள் அதனைத் தோற்கடித்தவர்கள் மீதே திரும்பும். அந்தப் பழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்துக்கும் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கும். அதிர்ஷ்டவசமாக, கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்திருந்தாலும் பட்ஜெட் வெற்றி பெற்றிருக்கின்றது.

முன்னைய மேயர் இ. ஆனோல்ட், சபை உறுப்பினர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியே கடந்த ஆண்டு பட்ஜெட்டை முன்வைத்திருந்தார். அவரை அரசியல் ரீதியான காரணங்களை முன்னிறுத்தி, இப்போதைய மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர் தோற்கடித்திருந்தார்கள். அதற்குப் பழி வாங்கும் வகையில், மணிவண்ணனைத் தோற்கடிப்பது பொருத்தமானது அல்ல. மணிவண்ணன், ஆனோல்ட் விடயத்தில் செய்தது தவறு என்றால் அதே தவறை எமது கூட்டமைப்பு உறுப்பினர்களும் செய்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இந்த விடயத்தில் கட்சித் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்துச் செயல்பட்டிருக்க வேண்டும்.

அதேபோன்று மணிவண்ணனும், கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவைப் பட்ஜெட்டுக்குப் பெற்றிருக்கவேண்டும். சிறந்த ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை யாழ். மாநகருக்கு வழங்குவதற்கு சகல அரசியல் தரப்பினரதும் முழுமையான ஆதரவு தேவை என்பதை மணிவண்ணன் மறக்கக் கூடாது” - என்றார். (இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 08 - 1963



மறைவு 08 - 12 - 2021

### திருச்செல்வம் செல்லையா
### (செல்வம்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Bern, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் செல்லையா அவர்கள் 08.12.2021 புதன் கிழமை அன்று அகாலமரணமானர்.

அன்னார், சித்தன்கேணியைச் சேர்ந்த செல்லையா - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், மீசாலை குமாரமூர்த்தி - பரமேஸ்லரி தம்பதியரின் மூத்த மருமகனும், வசந்தி அவர்களின் ஆருயிர் கணவரும். அபிநவன், கெற்சியா ஆகியோரின் ஆசை அப்பாவும், காலஞ்சென்ற சிவகுமாரன் பாலசுப்பிரமணியம்(கனடா), குலேந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி(ஈழும்) அவர்களின் ஆசை அண்ணனும், மலர்(ஈழும்), சீதா(லண்டன்), விஜயன்(லண்டன்), செந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தானும், துரைராஜா(ஈழும்), ராஜேஸ்வரி(ஈழும்), பாலசந்திரன் (ஈழும்), ரேவதி(கனடா), தமிழழகி(கனடா) ஆகியோரின் மைத்துனரும், மகேந்திரன்(லண்டன்), யோகதாஸ் (லண்டன்), தர்சினி(லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், உஷாநந்தினி, சிவகரன், கிருபாஜினி, கீர்த்தனா, விமல்ராஜ், நிமலராஜ்தி, திபாஸ்கர், மதுரிஜன், ஜனுசா, விபி சிப்போரா, லோவிசா, ஆரோன், கிரியோன், சுவீற்றி, தூரிகா, தீபிகா, சபீசன், சஞ்செய், சஞ்சனா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், நிந்துஜா, சுகந்தன், ஓசியா, ஜெம்ஸ், சேரா, மையிறா, மேசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்வைக்கு
Friday, 17 Dec 2021 9:00 AM - 4:00 PM
Saturday, 18 Dec 2021 4:00 PM - 6:00 PM
Sunday, 19 Dec 2021 4:00 PM - 6:00 PM
Brunskill Family Funerals 13 N Parade,
Chessington KT9 1QL, United Kingdom

நல்லடக்கம்
Monday, 20 Dec 2021 11:00 AM
Kingston Cemetery & Crematorium Bonner Hill Rd,
Kingston upon Thames KT1 3EZ, United Kingdom

தொடர்புக்கு:
**பாலன் (தம்பி)** :
+14169940261

தகவல்:
**குடும்பத்தினர்**.

### சு.க. உறுப்பினரை தாக்கிய

## இ.தொ.கா., மொட்டு கட்சி: இரு உறுப்பினர்கள் கைது

மஸ்கெலியா, டிசெ. 17

மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளர் மீது தாக்குதல் மேற்கொண்ட இரண்டு பிரதேச சபை உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்து ஆட்சி நடத்தும் மஸ்கெலியா பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பிரதேச சபையின் உப தவிசாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான பெரியசாமி பிரதீபன் சபையில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அமைதியின்மை ஏற்பட்டது.

இதன்போது ஏற்பட்ட மோதலில் பிரதேச சபையின் உப தவிசாளர் பெரியசாமி பிரதீபன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் எஸ்.ஏ.திஸாநாயக்க ஆகியோர் காயமடைந்து வைவத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தநிலையில், மஸ்கெலிய பொலிஸாரால் மஸ்கெலியா பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர் எஸ்.ஏ.திஸாநாயக்க, இலங்கை த் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் பெருமாள் ஆனந்தராஜ் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மோதலில் காயமடைந்த மஸ்கெலியா பிரதேச சபையின் உப தவிசாளர் பெரியசாமி பிரதீபன் தொடர்ந்தும் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சிவப்பு, மஞ்சள், பச்சை வேட்டை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - விலைவாசி



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்